# விடுதலைப்புலிகள்

குரல் – 110 | ஆடி – ஆவணி, 2003 | அன்பளிப்பு : 10/=



03 நாங்களும் எங்கள் நம்பிக்கைகளும்...
05 குரங்குபாஞ்சான் தங்ககம்...
07 தேசிய எழுச்சிப்பேரவை...
08 நூலக எரிப்பும் அரச பயங்கரவாதமும்.
10 புலர்வின் வெளிச்சங்கள்.


# பேரினவாத உணர்வு நிலையிலிருந்து ரணில் அரசு மீண்டு வரவேண்டும்

**இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாக அரசு சமர்ப்பித்த மாதிரி வரைபு குறித்து சட்ட வல்லுனர்களுடனான கலந்தாலோசனை, இப்போது, பாரிஸ் நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இக்கலந்துரையாடலில் எட்டப்படும் தீர்மானங்களை நன்கு பரிசீலித்த பின்னர் அடுத்தமாத (செப்டெம்பர்) இறுதிக்குள் புலிகளின் திருத்த வரைபு அரசுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.**

**சமாதானம் பற்றிய புதிய நம்பிக்கையுடன் சர்வதேச சமூகமும் காத்திருக்கின்றது.**

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு சமாதான வழியில் - அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் இலக்குடன் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அரசுக்கும் - புலிகள் இயக்கத்திற்குமிடையே போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகியிருந்தது.

தமிழர் தாயகத்திலுள்ள படைமுகாம்கள் அகற்றப்பட்டு அங்கு தமிழ்மக்களின் மீள்குடியேற்றம் நடாத்தப்படும் என்றும், இராணுவக் கெடுபிடிகள் நீக்கப்பட்டு தமிழ்மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ அனுமதிக்கப்படுவர் என்றும் நம்பப்பட்டது.

ஆயினும் எதிர்வுகூறப்பட்டது போல விடயங்கள் நடைபெறவில்லை.

இதுபோலவே தமிழ்மக்களின் மீள்குடியேற்றம் - புனர்வாழ்வு - புனரமைப்பு போன்றவற்றைச் செயற்படுத்தவென அமைக்கப்பட்ட 'சிரான்' கட்டமைப்பும் செயற்படத் தொடங்காமலே செத்துவிட்டது.

இந்த நிலையில், தகுந்த அதிகாரமுள்ள வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை புலிகள் கோரியிருந்தனர்.

அதற்கு உடன்பட்ட அரசும் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று வரைபுகளை புலிகளுக்கு அனுப்பிவிட்டது.

முதல் இரண்டையும் முற்றுமுழுதாக நிராகரித்த புலிகள், சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடன் மூன்றாவது வரைபை உடனடியாக நிராகரிக்காது பரிசீலனைக்கு எடுத்துள்ளனர்.


அரசு அனுப்பிய மூன்றாவது வரைபும் புலிகள் எதிர்பார்த்ததுபோல அமையவில்லை. ஆயினும் அதில் சில திருத்தங்களைச் செய்து - அர்த்தமுள்ளதொரு இடைக்கால நிர்வாகத்திற்குரிய வரைபை அரசுக்கு அனுப்ப புலிகள் முடிவெடுத்தனர். அடுத்தமாத இறுதிக்குள் இந்த திருத்த வரைபு அரசுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

புலிகளின் தருத்த வரைபை அரசு சாதகமாகப் பரிசீலிக்க வேண்டுமென்பதே புலிகள் இயக்கத்தின் எதிர்பார்ப்பாகும். திருத்த வரைபுக்கு அரசு அளிக்கப்போகும் பதிலில்தான் சமாதானத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுப்போயுள்ள இந்த நேரத்தில் உலகநாடுகளின் இராஜதந்திரிகள் தமிழர் தாயகத்திற்குப் பயணம் செய்து நிலைமைகளை நேரில் பார்த்து வருகின்றனர். உலக நிதி நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் களநிலைமைகளை கண்டறிவதற்காக வட - கிழக்கிற்கு விஜயம் செய்துவருகின்றனர்.

இந்த சமாதான காலத்திலும் கூட தமிழர் தாயகத்தில் இயல்புநிலை ஏற்படவில்லை என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். தமிழ்மக்களின் அகதிவாழ்க்கை இன்றும் தொடர்கின்றது. படையினரின் இராணுவ ஆட்சியே இன்றும்

(02ம் பக்கம் தொடர்ச்சி)




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# 83 யூலை இனப்படுகொலை
# 20 வருட நினைவு

தமிழரின் வரலாற்றில் மறக்கமுடியாததொரு துயர அத்தியாயம் 83 யூலை மாதத்து இறுதி வாரத்தில் இலங்கைத்தீவில் அரங்கேறியிருந்தது.

அன்றைய ஆட்சியாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசின் அனுசரணையுடன் சன்னதமாடிய சிங்களக் காடையர்கள் தமிழ்மக்களுக்கெதிராக தீவடங்கிலும் நடாத்திய இனக்கொலைத் தாண்டவத்தில் 3000ற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டிருந்தனர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டனர். பலநூறு கோடிரூபா பெறுமதியுடைய தமிழரின் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

அந்த ஒருவாரகாலமும் 'இரத்தவெறி பிடித்த காட்டுமிராண்டிகள் போல சிங்களவர் செயற்பட்டனர்' என வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களே விபரிக்கும் அளவுக்கு படுகொலைகளின் தன்மையும் - எண்ணிக்கையும் இருந்தன.

இருபது வருடங்கள் கழிந்துவிட்ட இன்றைய நிலையிலும் அக்கொடூரச் சம்பவங்கள் தமிழரின் மனதில் ஏற்படுத்திய வடுக்கள் இன்றுவரை மறையவில்லை.

அமைதிவழியில் தமிழர் தம் அரசியல் உரிமைகளை பேசிப்பெறமுடியும் என்ற அரசியல் அத்தியாயத்திற்கு தமிழினம் ஒட்டுமொத்தமாக முற்றுப்புள்ளி வைத்த வரலாற்றுச் சம்பவம் அது.

தத்தமது எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த தமிழ் இளைஞர் சமுதாயத்தை இனத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவைத்த திருப்புமுனை நாளாக யூலை இனப்படுகொலை அமைந்துவிட்டது.

சிங்களத்தின் ஆயுத வன்முறையை, ஆயுத முனையில் எதிர்கொள்ள ஆயிரம் - ஆயிரம் தமிழ் இளைஞர்கள் - யுவதிகள் முடிவெடுத்தனர். உயிரைப் பணயம் வைத்து விடுதலைப் போராட்டத்தில் குதித்தனர்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் பெரும் பாய்ச்சலுடன் முனைப்புறத் தொடங்கியது.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதைபோல சிங்கள இனவாதிகளுக்கு யூலைப் படுகொலையின் எதிர்விளைவு அமைந்துவிட்டது. தமிழரைக் கொன்று - மிரட்டி அடிபணிய வைப்பித்து விடலாம் என்று நம்பிய சிங்கள இனவாதிகளுக்கு யூலைப் படுகொலை தமிழர் மத்தியில் எழுச்சியையும் - ஒற்றுமையையும் ஊட்டியதுடன் தேசிய உணர்வையும் கொழுந்துவிட்டெரியச் செய்ததைக் கண்டு குழம்பிப்போயினர்.

ஆனாலும் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களை இராணுவத்தீர்வின் மூலம் தீவில் இருந்தே அழித்தொழிக்க முடியும் என்று இறுமாப்படைந்தனர்.

போரா? சமாதானமா? என ஒப்புக்குக் கேட்டுவிட்டு ஒட்டுமொத்தப் போரை, பல முனைகளிலும், தமிழர்மீது கட்டவிழ்த்துவிட்டனர்.

தமிழர்களின் அன்றாட வாழ்வில் சாவும் - அவலமும் கோலோச்சியிருந்தாலும், மறுபுறத்தில், தேசிய எழுச்சியும் விடுதலை வேட்கையும் விரைந்து வளர்ந்தன.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆட்தொகையைக் கொண்ட சிங்களப் படைகள், ஒருசில ஆயிரம் கொண்ட புலிப்படையை துவம்சம் செய்யப் போகும் நாளுக்காக சிங்களவர் காத்துக்கிடந்தனர்.

ஆனால், சிங்களச் சிப்பாய்களின் உடலங்கள் தினந்தோறும் சவப்பெட்டிகளிலும் - பொலித்தீன் பைகளிலும் ஊர்போய்ச் சேர்ந்தபோது சிங்களமக்கள் திகைப்படைந்தனர். அதேவேளை, சுவரில் எறிந்த பந்துபோல போர் அனர்த்தங்கள் சிங்கள தேசத்தின் முற்றங்களில் காட்சி கொடுத்தபோது அவர்களின் போர்வெற்றிக் கனவுகள் கலையத்தொடங்கின.

போர் அரங்கில் புலிவீரர்களின் வீரமும் - தியாகமும் சிங்களப் படையினர்க்கு சிம்ம சொப்பனத்தைக் கொடுத்தது. பல நாடுகளின் படைத்தளபாட மற்றும் இராணுவ ஆலோசனை உதவிகளைப் பெற்று போர்புரிந்தும் புலிகளை அசைக்கமுடியவில்லை. போரில் புலிகளை வெல்லமுடியாது என்ற இராணுவ யதார்த்தத்தையும் சிங்கள தேசத்திற்கு புலிகள் இயக்கம் உணர்த்தியது.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஒரு அரசியல் பொறியாக அமைத்து அதற்குள் புலிகளை சிக்கச்செய்து அவர்களின் போர்ப்பலத்தை நசுக்க முடியுமா? என்றும் சிங்கள ஆட்சியாளர்கள் முயன்று பார்த்தனர்.

போர் மூலமோ - சதி அரசியல் மூலமோ புலிகளைத் தோற்கடிக்க சிங்களத்தால் முடியவில்லை.

புலிகளின் இராணுவ பலத்தையும் சிங்கள ஆட்சியாளர்கள் கண்டுகொண்டனர். அதுபோல, இப்போது புலிகளின் அரசியல் பலத்தையும் அவர்கள் தெரிந்து கொண்டுள்ளனர்.

20 வருடங்களுக்கு முன்னர் தமிழர்களை கிள்ளுக்கீரைகளாக சிங்கள ஆளும் வர்க்கம் நினைத்தது. ஆனால் இப்போது தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தையும் - அரசியல் செல்வாக்கையும் கண்டு சிங்கள ஆளும் வர்க்கமே அச்சமடையத் தொடங்கியுள்ளது.

புலிகளை ஆறுமாத காலத்தினுள் அழித்துவிடும்படி ஆணைகொடுத்த ஜே.ஆரின் காலம் ஒரு கனவாகவே போய்விட்டது. இப்போது இனவாதிகளின் உளறல் வேறுவிதமாக உள்ளது. 'மீண்டும் போர் மூண்டால் புலிகள் யாழ்.குடாவை கைப்பற்றிவிடுவார்கள்', 'திருமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றி விடுவார்கள்' என்று அஞ்சும் காலமாக உருமாறிவிட்டது.

20வருடகால இடைவெளியில் நிகழ்ந்த அரசியல் - இராணுவப் பிரளயம் இது. தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய இந்த வரலாற்றுக் கீர்த்தியைப் பெற்றுத்தந்த பெருமை தலைவர் பிரபாகரனையே சாரும்.

போர்மூலம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப் புறப்பட்ட சிங்கள ஆளும் வர்க்கம் படுதோல்வி கண்டுவிட்டது. அதை உணர்ந்து இப்போது அமைதி வழியில் அரசியல் தீர்வு தரப் போவதாகக் கூறுகின்றது. அதற்கு சந்தர்ப்பமும் - கால அவகாசமும் புலிகளால் வழங்கப்படுகின்றது.

சமாதானத்திற்கான இந்த வாய்ப்பை சிங்கள அரசு சரியாகப் பயன்படுத்தி தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்க முன்வரவேண்டும் என்பதே புலிகள் இயக்கத்தின் விருப்பமுமாகும். ●

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

(1st பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. அகதி முகாம்களிலுள்ள மக்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்லவிடாது இராணுவம் தொடர்ந்தும் தடைவிதித்தபடியுள்ளது.

சமாதான முயற்சிகளுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றும் விடயத்தில் இராணுவம் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யத் தயாரில்லை. சிங்களக் கடற்படையினரின் சமாதான விரோதச் செயற்பாடுகள் வர வர வளர்ந்து செல்கின்றன.

சமாதான முயற்சிகளுக்குக் குறுக்கேயுள்ள இந்த இராணுவ வலயத்தை - இராணுவக் கெடுபிடிகளை தொடர்ந்தும் தக்கவைக்க படையினர் ஏன் விரும்புகின்றனர்? இவை தொடர்பாக அரசு ஏன் மௌனம் சாதிக்க முனைகின்றது? என்ற கேள்விகளை சர்வதேச சமூகம் எழுப்பிவருகின்றது.

இந்த இராணுவ வலய விடயத்தில் அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து மக்களின் மீள்குடியேற்றத்திற்கு வழிவிடாது விட்டால் இடைக்கால நிர்வாகத்திட்டத்திற்கு பலத்த பின்னடைவு ஏற்படும் என்பது நிட்சயம்.

உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றும் விடயத்திலும் 'சிரானின்' செயற்பாட்டு விடயத்திலும் சிங்கள அரசு அளித்த உறுதிமொழிகளை அது நிறைவேற்றவில்லை.

இது தமிழ்மக்கள் மத்தியில் சிங்கள அரசு தொடர்பான அவநம்பிக்கையுணர்வை அதிகரிக்கச் செய்துள்ளது.

தமிழர்களுடன் சமரசம் செய்ய முனைவதும், பின்னர், கொடுத்த வாக்குறுதிகளை குப்பைக் கூடைக்குள் போடுவதும் முன்னைய சிங்கள ஆட்சியாளர்களின் பண்பாக இருந்துள்ளது.

சிங்கள ஆட்சியாளர்களுக்கே உரித்தான இந்த வரலாற்றுப் பண்பிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டு வரவேண்டும் என்பது தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

படைமுகாம்கள் அகற்றப்படும் - தமது வீடுகளுக்கு போய்ச் சேரமுடியும்... என்று எதிர்பார்த்துக் கிடந்த தமிழ் மக்களுக்கு படையினர் புதிய முகாம்களை அமைத்து வருவது அவநம்பிக்கையை கொடுத்துள்ளது. அதேநேரம், படையினர் வீதிச்சோதனைகளை மேற்கொண்டு மக்களை இம்சைப்படுத்தியும் வருகின்றனர்.

மக்களை சோதனையிட படையினர்க்கு சட்ட அதிகாரம் இல்லை என்ற நீதிமன்ற தீர்ப்புகளையும் பொருட்படுத்தாது படையினர் செயற்படுகின்றனர்.

அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இவை தொடர்பாக எந்தவித கருத்தும் கூறாது தொடர்ச்சியாக மௌனம் காப்பது தமிழ்மக்களிடம் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முன்னர் நடாத்தப்பட்ட கிராமப் படுகொலைகளால் தமது ஊர்களை ஒட்டுமொத்தமாகத் துறந்தோடிவந்து அகதிமுகாம்களில் வசிக்கும் தமிழ்மக்கள், இந்த சமாதான சூழலைப் பயன்படுத்தி தமது சொந்த ஊர்களில் குடியேற எடுக்கும் முயற்சிகளையும் படையினர் தடுத்துவருகின்றனர். இதே சமயம், எல்லைப்புறங்களில் சிங்கள மக்களை குடியேற்ற இராணுவம் தானே முயற்சி எடுத்து - செயற்படுத்தி வருகின்றது.

இவ்வாறு சிங்களப் படையினர் இனவெறி உணர்வுடன் அதிகாரத்தைப் பயன்படுத்தும் முனைப்புடன் இருக்கின்றபோது புலிகளுக்கு ஓர் இடைக்கால நிருவாக அமைப்பை அரசு வழங்கினாலும் அதனால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. சிரானைப்போல இதுவும் செத்துமடியும் நிலையே உருவாகும்.

தமிழ்மக்களின் பாதுகாப்பையும் - அவர்களது கௌரவமான வாழ்க்கையையும் - தத்தமது வீடுகளில் வசிக்கும் அவர்களது பிறப்புரிமையையும் உறுதிப்படுத்தும் ஒரு இடைக்கால நிருவாக அமைப்பையே தமிழ்மக்கள் விரும்புகின்றனர். இத்தகையதொரு அதிகாரம் மிக்க அமைப்பை நிருவகிக்கவே புலிகளும் சம்மதிப்பர். ●



www.eelamview.com

# நாங்களும் எங்கள் நம்பிக்கைகளும் அல்லது "மனம் வெளுக்க வழியுண்டா?"

**"பிதாவே அந்த யூதர்கள் அறியாமல் செய்தார்கள்**
**இந்த யூதர்களும் அறியாமல் செய்கின்றார்கள்**
**இவர்களது இம்சையும் கொடுமையும்**
**எங்களுக்கு விடுதலையைத் தரும் என்பதை**
**அறியாமல செய்கின்றார்கள் - ஆமென்"**

*(கவிதை கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தினுடையது)*

க. வே. பாலகுமாரன்

இத்தீவில் இற்றைவரை மனிதம், அரசியல் நெறிமுறை, நீதி என்பவற்றிற்கெதிராக இழைக்கப்பட்ட அத்தனை குற்றங்களுக்குமான தண்டனையை இறுதித் தீர்ப்பாக வரலாற்றன்னை விரைந்து எழுதிக்கொண்டிருக்கிறாள். இத்தீர்ப்பின் விளைவால் இத்தீவின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது என்பதை ஏலவேயுணர்ந்த "காலத்தின் புன்னகையை" (நன்றிசித்தார்த்தன) நாம் காணத்தொடங்கி விட்டோம். எனவே நாம் எங்கே நிற்கின்றோம? சிங்களம் எங்கே நிற்கின்றது? சருவதேசம் எங்கே நிற்கின்றது? ஒரு சுற்றுப் பேச்சுக்கள் முடிந்த நிலையில் இக்கணக்கெடுப்பு அவசியமானது. வதைபட்ட நெஞ்சத்தில் சினத்தீ பற்றியெரிந்தாலும் நாம் அமைதியாகவுள்ளோம்; மேடு, பள்ளங்கள், அழிவுகள், வெற்றி, தோல்விகள் எல்லாவற்றையும் கண்டுவிட்டோம்; உயிர்பிரியும் வேளையிலும் பதற்றமின்றி வாழ பழகிக்கொண்டோம். நாமே எமக்காகப் போராடினோம்; மாண்டோம்; "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதையுணர்ந்து கொண் டோம். எனவே மிகத் தெளிவாக உள்ளோம். பக்குவமும் முதிர்ச்சியும் பெற்றதால், காத்து நிற்கின்றோம். 'இன்று போய் போர்க்கு நாளை வா!' என்பது அன்றைய கதை. இன்று போய் தீர்வோடு நாளை வா என்பது இன்றைய கதை.

நாம் போரை ஒரு வருடங்களுக்கு முன்னே இடைநிறுத்தி உலகம் எதிர்பார்க்கும் அரசியல் நாகரிகம் பேணி, பேச்சுவார்த்தை அரங்கிலே எதிரியை சந்தித்து வருகின்றோம். இதனால் உலகம் எம்பக்கம் சாய்ந்து எமது நியாயத்தினை உணர்ந்து எமக்கு முழுமையாக உதவும் என்கிற மாயையெல்லாம் எம்மிடமில்லை. சருவதேசம் எப்போதுமே நீதியின் பக்கம் முழுமையாக நின்றதில்லை. இன்னும் சொல்லப்போனால் பேராசிரியர் சிவசேகரம் சொல்வது போல் மீறப்பட்டது மனித உரிமையா இல்லையா என்பது மீறப்பட்டவர்கள் யார் என்பதைப் பொறுத்தே அமையும் என்பதை நாமும் நன்குணர்வோம். ஆனால் தேவையேற்படும்பொழுது தமது நலன், பல்வேறு புவிசார் அரசியற் காரணிகள், சருவதேச கருத் துருவாக்கம், தொடர்புபட்ட விடுதலையமைப் பின் நுண்ணறிவு, இராணுவ வன்மை, இணைந்த இராசதந்திர நுட்பம் போன்ற பல காரணங்கள் கருதியும் முழுமையாக இல்லாவிட்டாலும் பகுதியாகத்தன்னும் தார்மிகக் கடப்பாடுகளை முற்றிலுமாகப் புறக்கணிக்க முடியாதநிலை உருவாகும் என்றே நாம் நம்புகின்றோம். உலகின் மனச்சான்றின் மீது இன்னமும் எமக்கு நம்பிக்கையுள்ளது. உலகிலிருந்து மனிதம் என்றும் ஒரேயடியாக செத்துவிடாதென்பது எமது அசைக்கவியலாத நம்பிக்கை.

எனவே போர்நிறுத்தத்தின் பின்னர் நாம் ஓரளவும், சருவதேசம் சிறிதளவும் முன்னகர்ந்திருப்பது உண்மை. ஆனால் சிங்களம் எங்கே நிற்கின்றது? அது நின்ற இடத்திலேயே நிற்கின்றது. அது எதனை உணர்ந்திருக்கின்றது? எதனையும் உணர்ந்ததாகத் தெரியவில்லையே. இதற்கான ஆதாரங்கள் இதோ. சிங்கள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, உயர்குழாம், இராணுவம், அறிவுசீவிகள் என்ன நினைக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரிந்ததுதான். எமக்குத் தெரியவேண்டியது அடுத்த தேர்தலில் வாக்களிக்கப் போகின்ற வாக்கு வங்கியாகக் கருதப்படும் சிங்கள நடுத்தர, மேல், கீழ்த்தட்டு மக்கள் என்ன கருதுகின்றார்கள் என்பதே. சிங்களத்தின் எதிர் காலம் குறித்து கவலைப்படுவதால் உண்மைகளைப்பேச முன்வரும் மிகச் சிலரில் ஒருவரான ஜயதேவ உயங்கொட சொல்வதுதான் இது: "இந்த விடயத்தில் சிங்கள மக்கள் மத்தியில் மிகுந்த குழப்பநிலையே காணப்படுகின்றது. ஒரு மட்டத்தில் போர் தொடர்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு சமாதானம் தேவைப்படுகின்றது. அரசியல் தீர்வும் தேவைப்படுகின்றது. அதேவேளை புலிகளைப் பற்றியும் தமிழரின் அரசியல் நோக்கம் பற்றியும் அவர்களிடம் பரவலான அச்சமுள்ளது. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் ஆக்கபூர்வமான அரசியற் பரிமாற்றம் இருக்கவில்லை. சிங்களத் தேசியவாதியூடாகவே சிங்கள மக்கள் தமிழ் அரசியல் பற்றி பெரும்பாலும் அறிந்துகொள்கின்றார்கள். இது மிகவும் திரிபுபடுத்தப்பட்டதாகவே உள்ளது." (நன்றி: செவ்வி - டி.சிவராம், வீரகேசரி 10.08.2003) சத்தியமான வசனங்களிவை. இவற்றினை மிகப் பொருத்தமான நேரத்தில் மனம் திறந்து சொன்னதற்காக தமிழ்மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் உயங்கொடவிற்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். அவரது செவ்வியில் சில ஒளிக்கீற்றுக்கள் வருமாறு, "சிங்களத் தேசியவாதம் முன்னோக்கிப் பார்க்கும் ஒன்றல்ல. பூண்டோடு அழிதல் பற்றிய அச்ச உணர்விலேதான அது தங்கி நிற்கின்றது— தமிழர் பிரச்சினையை ஒரு சிறுபான்மைப் பிரச்சினையாக சிங்கள ஆளும் வர்க்கம் இன்னமும் பார்ப்பதுதான் சிக்கல் என நினைக்கின்றேன். பேராசிரியர் பீரிஸ் ஆகட்டும் சனாதிபதி சந்திரிகா ஆகட்டும் அவர்கள் தமிழ்மக்கள் பிரச்சினையை ஒரு சிறுபான்மையினரின் விடயமாகவே பார்க்கின்றனர். சிங்கள ஆளும் வர்க்கத்தின் புரிதலில் உள்ள வரையறை இதுதான்.... துரதிட்டவசமாக இலங்கையினுடைய யாப்பியல் சட்ட விவாதங்கள் சமஷ்டி என்கிற கருத்தை ஏற்குமளவிற்கு வளர்ச்சியடையவில்லை. அதாவது தமிழ் சிறுபான்மையை தேசிய குறிக்கோளின் அங்கமாக கொள்ளப்படவில்லை." மதிப்பிற்குரிய உயங்கொடவின் கருத்துக்களைவிட மேலதிகமாக யார் என்ன கூறமுடியும?

இன்னொரு ஆதாரத்தினையும் பாருங்கள். உண்மையிலே எம் மக்களுக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்த தகவலிது. "அரச சார்பற்ற நிறுவனமான 'சோசல் இண்டிகேற்றர்' 17மாவட்டங்களில் அபிப்பிராய வாக்கெடுப்பினை நடத்தியது. சமஷ்டிமுறை குறித்து சிங்கள மக்களில் 50.5 விழுக்காடு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். 27.5 விழுக்காடு மக்கள் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டனர். சமாதானம் என்றால் யுத்தம் முடிவிற்கு வருதல் என்றே பொருள் என 17மாவட்டங்களைச் சேர்ந்த 51.9 விழுக்காட்டு மக்கள் கூறியுள்ளனர். (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்கள் கணிப்பில் இடம்பெறவில்லை) 50.6 விழுக்காட்டு சிங்கள மக்களே இந்த அரசிற்கு அமைதி வழியில் சமாதானத்தை உண்டாக்கும் நோக்கம் உண்டென்றும், 16.8 விழுக்காட்டு சிங்கள மக்களே விடுதலைப் புலிகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் காணும் விருப்பு உண்டென்றும் மூன்றாம் தரப்பு தலையீட்டை 22.4 விழுக்காட்டு சிங்கள மக்களே விரும்புகின்றனர் என்பதும், கடற்புலிகளை பிறிதொரு கடற்படையாக 4.3 விழுக்காட்டு சிங்கள மக்களே ஏற்கத் தயாராகவுள்ளனர் என்பதும் இக்கணிப்பின் முடிவுகள். (வீரகேசரி 10.08.2003) இவைகூறும் பொருள் என்ன? சிங்கள மக்கள் இன்னமும் முன்நகர ஆயத்தமாகவில்லை என்பதல்லவா? இப்போது நிலைமைகள் மிகத் தெளிவாகிவிட்டன.

சிங்களம் என்ன நினைக்கின்றது? சமாதானம் என்றால் புலிகள் போரை நிறுத்திவிடல்; பேச்சுவார்த்தை என்றால் சிறிலங்காவின் இறைமை, தன்னாட்சியுரிமை, பிரதேச ஒருமைப்பாட்டிற்கமைவான தீர்வொன்றை புலிகளே முன்வைத்து அதனை ஏற்றுச் செயற்படல்; இயல்பு நிலைக்குத் திரும்புதல் என்பது புலிகள் பெரும் சுகத்தின்பின் அடைந்த அரசியல் இராணுவ வெற்றிகளைக் கைவிட்டு அவர்களால் கட்டியமைக்கப்பட்ட நீதித்துறை, நிதித்துறை, காவல் துறை போன்ற கட்டமைப்புக்களை தாமாகவே கலைத்துவிடல்; அபிவிருத்தி என்பது சிங்களத்தின் மேம்பாட்டிற்காக புலிகளும் அரசும் சேர்ந்து நிதியைப் பெறல். எனவேதான் வேதாளம் மீண்டும் முருங்கைமரத்தில் ஏறிவிட்டது. இதற்கு உடனடிக் காரணம் புலிகளுக்கு எல்லாவித அதிகாரங்களையும் உள்ளடக்கிய இடைக்கால நிருவாக அமைப்பினை சிங்கள அரசு வழங்கப் போகின்றது என்கிற வெறும் வதந்தியே. இதனைப் பாருங்கள். யூலை 20ஆம் திகதிய சண்டேரைம்ஸின் தலைப்புச் செய்தியிது. "விரிவான அதிகாரங்கள் வட-கிழக்குச் சபைக்கு -ஆனால் காவல்துறை, பாதுகாப்பு, வருவாய், நிலம் தொடர்பான அதிகாரங்கள் இல்லை" இது எப்படியுள்ளது? நவீன இனவாதியாக உருவெடுக்கும்-சிறிலங்காவின் எதிர்காலம் குறித்து இடைவிடாது நீலிக்கண்ணீர் வடிக்கும் இக்பால் அத்தாசும் ஜலன்டையே மிஞ்சும் அளவிற்கு இனவாதம் கக்கும் குறுகிய மனப்பான்மையையே அதிகம் பிரதிபலிக்கும் சண்டே ரைம்சும் எமக்குச் சொல்லும் செய்திகள் என்ன? சிந்திக்கவேண்டியவர்கள் நாங்களல்லவா?

இனச்சிக்கலின் இன்றைய முடிச்சாகக் கருதப்படும் இடைக்கால நிருவாகக் கட்டமைப்புப் பற்றிய வரைவையே வரையறுத்துக் கூறமுடியாமல் தயங்கி, பதுங்கி நாலுபக்க அறிக்கையை "கலந்துரையாடலுக்கான அறிக்கை" என தந்திரமாகப் பெயரிட்டு புலிகளுக்கு ஒன்றும் சனாதிபதிக்கு இன்னொன்றுமாக அனுப்பி பல்வேறு முகங்களைக் காட்டி எல்லோரையும் திசைதிருப்பி ரணில் ஆடும் ஆட்டத்தின் அருத்தம்தான் என்ன? புலிகளுக்கு அனுப்பியதாகக் கூறப்படும் பிரதியில் இருந்த வார்த்தைகளை "காவல்துறை, பாதுகாப்பு, வருவாய், நிலம் தொடர்பான அதிகாரங்கள் தவிர" என்கிறவை சனாதிபதிக்கு அனுப்பப்பட்டதில் இருக்கவில்லை என்பதை சண்டே ரைம்ஸ் - 20.07.03, 27.07.03 ஆகிய திகதிகளில் உறுதிப்படுத்தியது.

இவ்வாறு பல்வேறு முகம் காட்டும் வித்தையை 08-14/08ஆம் திகதிய வெள்ளிநாதத்தின் தலையங்கம் உரித்துக் காட்டியுள்ளது. "பல்வேறு முகங்களில் அரசாங்கம் இன்று மக்கள்முன் வருகின்றது. பீரிசின் முகம் புன்னகைத்து சமாளிக்க முயல்கின்றது. மொறகொடவின் முகம் தந்திரோபாய சூட்சுமத்துடன் மோனலிசா ஓவியத்தின் இதழ்பிரியா - புரியமுடியாத முறுவல் காட்டுகின்றது. ரணில் ஒரு பிக்குவின் சாயலில சிரிப்பவராகத் தென்படுகின்றார். முப்படைத் தளபதிகள் காட்டுவது வில்லச்சிரிப்பு முகம்" கதிர்காமரின் முகத்தையும் பார்த்துவிடுவோம். "இடைக்கால நிருவாகம் என்பது இறுதிக்கான ஆரம்பம். தனிநாடு உருவாக்கும் சூழலை உங்கள்முன் அது உருவாக்கிவிடும். பாதுகாப்பு நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. பலாலிப் படைமுகாமின் எதிர்காலம் நூலிழையில் தொங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டினையும் கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகளிவை" (03/08 உதயன). காட்டிக்கொடுப்பிற்கே புதிய அருத்தம் கற்பிக்கும் கதிர்காமரின் விசுவாசத்தின் அறிவுத் துரோகமிது. அவருடைய தலைவியார் கூறுகின்றார் (08/08 டெய்லி மிரர்) "புலித் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இணைப்பாட்சித் தீர்விற்கு சம்மதிப்பாரேயானால் என் தலையை அறுத்து தட்டில்வைத்து அவருக்கு அனுப்பிவைப்பேன்." இதனையே மறுபக்கமாகத் திருப்பிப் போட்டுப்பாருங்கள். சிங்களத் தலைவர்கள் இணைப்பாட்சித் தீர்வினை ஏற்றால் தமிழ்மக்கள் அனைவரும் தம் தலைகளைக் கொய்து அம்மையாருக்கு அனுப்புவார்கள் என்று வரும.

இடைக்கால நிருவாக அமைப்பின் வரைபு தொடர்பாக புலிகள் தமது நிலைப்பாட்டினை அறிவிக்க முன்னரே இவ்வளவும் நடந்தேறிவிட்டது. அப்படியானால் இனியென்ன நடக்குமா? மு.திருநாவுக்கரசு அவர்கள் கூறுவதை அவதானியுங்கள் "சுதந்திரக் கட்சியும் ஐ.தே.கட்சியும் தமிழர் தொடர்பான பிரச்சினைகளில் ஒரேமாதிரியான தீர்வையே எடுக்கின்றன. ஒரு கட்சி ஆட்சியிலிருக்கும்போது தமிழர்களை ஒடுக்குவதற்கு மறுகட்சி துணைபோகின்றது. மறுகட்சி பதவிக்கு வரும்போது முன்னர் ஆட்சிபுரிந்த கட்சி தமிழர் மீதான ஒடுக்குமுறைக்குத் துணைபோகின்றது. ஒடுக்குபவர்கள் ஒடுக்கப்படுபவர்களை ஒடுக்கிக்கொண்டே இருக்கிறார்கள். புலிகள் பொறுமையோடு இருக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். அரசியற் தீர்வை முன்வைத்தபோது அதன் கபடத்தன்மையை அறிந்து குரல் கொடுத்தவர்கள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு துண்டுவீச்சுக்கு உள்ளானார்கள். சமாதானத்தைக் குழப்புபவர்கள் என குற்றம் சாட்டப்பட்டார்கள். தற்போது சமாதானத்தைக் குழப்பும் சிங்களத் தலைவர்கள்மீது குண்டுவீச்சு நடத்தப்படுமா? சமாதானத்தை வலியுறுத்தி உண்ணாவிரதமிருக்க சிங்களத் தலைவர்கள், ரணில் போன்றோர் முன்வருவார்களா?" (நமது ஈழநாடு 04.08.2003)

இங்கே திரு.மு.திருநாவுக்கரசு எழுப்பும் பிரதான ஆழமான அசைக்கமுடியாத வினா இதுதான். அமைதியைக் குழப்புவோர் எனக் கூறப்படுவோர் மீதும் சருவதேசப் பயங்கரவாதிகள் எனக் கூறப்படுவோர் மீதும் பல்லாயிரம் கோடி செலவழித்து படையெடுத்து நீதியை(?) நிலைநாட்டுவோர் சிறிலங்கா மீதும் இத்தகைய நடவடிக்கையை எடுப்பார்களா? இங்குள்ள முரண்நகையை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என நம்புகின்றோம். நாங்களும், எங்கள் நம்பிக்கைகளும் இவைதான். கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் வார்த்தைகளோடு முடிக்கின்றோம்.

**"கண்ணீரைக் கடந்துள்ளோம்**
**வியப்புக்களை மீறியுள்ளோம்**
**உணர்ச்சிச் சுழிப்புக்களை**
**உதறிவிட்டோம்...**
**ஒருபெரும் நிகழ்வை**
**தரிசித்துள்ளோம்**
**அதன் பலத்தில்**
**அதன் விதைப்பில்**
**அதன் துணிவில்**
**நிமிர்ந்து நிற்கின்றோம்.**






www.eelamview.com

# எவருக்கும் கேட்காத ஆச்சே மக்களின் குரல்.

**சுதந்திரம் என்பது எல்லோருக்கும் பிரியமான ஒன்று. சுதந்திரம் பறிக்கப்பட்டவர்களுக்கு அது அதிக பிரியமானது.**

- ஆ.யூசுப் டோட் -
செயலாளர்,
ஐரோப்பிய ஆச்சே சுதந்திர இயக்கம்.

“பெரும் தொகையில் மக்கள் காணாமல் போதல்களை, பெயரில்லாத கல்லறைகளை, தந்தைமார் இல்லாத குழந்தைகளைப் பெரும் மௌனம் மூடிக் கொண்டிருக்கிறது. பயம், விரக்தி, இரகசியம் வெளிப்படாமை யிலிருந்தே அந்த அமைதி உருவாகியிருக்கிறது.....”

1992.02.09ஆம் திகதியன்றே இன்டிபென்டன்ற் இதழ் இப்படி எழுதியது. இந்தோனேசியாவின் ஒரு மாகாணமாக இப்பொழுது வரை இருக்கின்ற ஆச்சேயில் நிலவிவருகின்ற சூழ் நிலையையே அந்த இதழ் அப்படிக் குறிப்பிட்டிருந்தது.

இந்த ஆச்சேயின் வரலாறு என்ன? அங்குள்ள மக்கள் யார்? அவர்கள் குரல் ஏன் யாருக்கும் கேளாமல் போனது? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததே.

ஒருபுறம் மலாக்கா நீரிணையும் மறுபுறம் இந்து சமுத்திரமும் அணைத்துக் கொண்டிருப்பதும் மத்தியரேகை நடுவில் ஊடறுக்கின்றதுமான சுமாத்திரா தீவின் வடக்கு முனையில் ஆச்சே மாகாணம் அமைந்திருக்கிறது.

1292ஆம் ஆண்டில் புகழ் பெற்ற ஆய்வுப் பயணவரான மார்க்கோ போலோ சுமாத்திரா தீவுகளுக்கு வந்தபோது தன் வருகை அங்கே ஏற்படுத்தப் போகும் இரத்தக் களரிகளை உணர்ந்திருக்கமாட்டார்.

1509ஆம் ஆண்டில் போர்த்துக்கேய வர்த்தகர்கள் அங்கே காலடி வைத்தார்கள். வழக்கம் போலவே டச்சுக்காரர்கள் 17ஆம் நூற்றாண்டில் காலூன்றிக் கொண்டார்கள். 17ஆம் நூற்றாண்டின் பிற்கூறுகளில் பிரித்தானியரும் வந்தார்கள். ஆனால் அவர்களால் டச்சுக்காரரோடு தாக்குப்பிடிக்க முடியாமல், மலாக்கா தீவைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பிரதியாக சுமாத்திராவிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறினார்கள். 19ஆம் நூற்றாண்டு முழுவதும் டச்சுக்காரர்கள் தங்கள் ஆதிக்கத்தை உள்ளூர் ஆட்சியாளர் மீது விரிவாக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை இறுதிவரை (1873-1903) எதிர்த்துப் போராடியவர்களாக ஆச்சே மக்கள் இருக்கிறார்கள். 2ம் உலகப் போரின்போது (1939-1945) கிட்டத்தட்ட சுமாத்திரா முழுவதுமே ஜப்பானிய ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது.

1942ம் ஆண்டிலிருந்து போர் முடிவுவரை இந்தோனேசியாவில் நிகழ்ந்த சுதந்திரப் போராட்டத்தில் சுமாத்திரா முக்கிய பங்கை வகித்தது. இங்கே 25மில்லியன் ஆச்சே மக்கள் வாழ்கிறார்கள். ஆச்சே மாகாணத்தில் மட்டும் 5மில்லியன் ஆச்சே மக்கள் வாழ்கிறார்கள்.

இவர்கள், தங்களை, இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டை கையில் வைத்திருக்கும் ஜாவா இன மக்களிலிருந்து வேறுபட்டவர்களாகக் கருதுகிறார்கள். கிபி 700 ஆண்டளவில் தென்கிழக்காசியாவில் முதன் முதலாக இஸ்லாம் மதத்தை தழுவிக்கொண்ட நாடாக ஆச்சே மாறியது. 804ம் ஆண்டளவில் சுல்தான் ஆட்சி நிறுவப்பட்டது. இந்து சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் மலாக்கா நீரிணைமீது இந்த சுல்தான் செல்வாக்குச் செலுத்தினார். வருமானம் தருகின்ற வாசனைத்திரவிய வர்த்தகத்தின் அனுகூலத்தைப் பெறும் விதத்திலேயே டச்சு கிழக்கிந்திய கம்பனி உருவாக்கப்பட்டது.

1602ம் ஆண்டில் டச்சுக்காரருக்கும் பிரித்தானியருக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஆச்சே பகுதிகள் டச்சு செல்வாக்குக்கு உட்பட்டன. 1873ம் ஆண்டில் டச்சுக்காரர் ஆச்சேமீது படையெடுத்தனர். அங்கே அவர்களுக்குக் கடும் எதிர்ப்புக் காத்திருந்தது. டச்சுக்காரர்களால் அந்த இராச்சியத்தை முழுமையாக பணியவைக்க முடிய வில்லை. உண்மையைச் சொல்லப்போனால் 50வருடங்களுக்கு மேலாக அங்கு சண்டைகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. 1942இல் டச்சுக்காரர் ஆச்சேயை விட்டு வெளியேறினார்கள். அந்த சுதந்திரம் நீண்டநாட்கள் நீடிக்க வில்லை. 1949ம் ஆண்டில் புதிதாக உருவாகிய இந்தோனேசியா நாட்டில், ஆச்சேயும் அதன் விருப்பத்திற்கு மாறாக உள்ளடக்கப் பட்டது.

இந்த ஆணையை நடைமுறைப்படுத்த ஜாவாவிலிருந்து துருப்புகள் வந்திறங்கினார்கள். தொடர்ந்துவந்த வருடங்களில் சமயக் கட்டுப்பாடற்ற அரசை வீழ்த்த ஆச்சே மக்கள் இஸ்லாமிய போராட்டங்களை நடத்தினார்கள். இதன் காரணமாக இந்தோனேசியா ஒருவகை சுயாட்சியை ஆச்சேக்கு வழங்கியது. ஆனால், ஜாவாவில் இருந்து மில்லியன் கணக்கான ஜாவா இனத்தவர்கள் ஆச்சேக்குள் புலம்பெயர்ந்தார்கள்.

1976ம் ஆண்டிலே “சுதந்திர ஆச்சே” போராளிகள் (GAM) சுதந்திர பிரகடனம் செய்தார்கள். இந்தக் கிளர்ச்சியை அடக்க இந்தோனேசிய இராணுவம் சுவிரக்கமற்ற தந்திரோபாயங்களைக் கையாண்டது. அப்பாவிகளான பல ஆச்சே மக்கள் இதற்குப் பலியானார்கள்.

ஒரு வருடமாக இந்தப் பரவலான கிளர்ச்சியை அடக்க முயற்சிசெய்து தோல்விகண்டபின், பிராந்திய இராணுவக் கமாண்டரான மேஜர் ஜெனரல் ஜோக்கோ பிரமானோவின் ஆணைகளின் பேரில் இந்தோனேசிய ஆயுதப் படைகள் திட்டமிட்ட படுகொலை முயற்சிகளில் இறங்கினார்கள். முறைமையான பிராந்தியப் படைகள் மீளப்பெறப்பட்டு, அவற்றைப் போல் இருமடங்கு கமாண்டோப் படையினர் களமிறக்கப்பட்டார்கள்.

இந்த இராணுவக் கமாண்டர், பெரும் தொகையில் படுகொலை செய்யும் முயற்சியில் உள்ளூர் மக்களையும் இணைந்து கொள்ள கோரினார். 'ரெம்போ' இதழுக்கு (17.11.1990) பிரமானோ அளித்த பேட்டியிலே, “GAM உறுப்பினர்களை கண்டால் அவர்களைச் சுட்டோ, வெட்டியோ கொலைசெய்து விடுங்கள்.... விசாரணை எதுவும் தேவையில்லை, என்று இந்த மக்களுக்குக் கூறியிருக்கிறேன்.” என்று கூறியிருக்கிறார். இதே நேர்காணலிலே, ஏற்கனவே பலர் கொல்லப்பட்டு விட்டதாகவும், கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் கொல்லப்படுவது நிகழ்வதாகவும் சொல்லியிருக்கிறார்.



ஆயுதம் தரிக்காத மக்களைக் கொன்று, ஒரு பயங்கரவாத - முறியடிப்பு உத்தியாக, அவர்களது சிதைக்கப்பட்ட உடல்களை பகிரங்கமான இடங்களில் விட்டுச்செல்வதை சில படைவீரர்கள் ஒப்புக்கொண்டார்கள்.... சிதைக்கப்பட்ட உடலங்கள் பாதையோரங்களிலும் கிடங்குகளிலும் கிடக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் உள்ளூர் குடிமக்களாகும்.
- த எக்கணமிஸ்ற் -
(15.12.1990)

1990 நவம்பர் 08ம் திகதி, மனித உரிமைகளுக்காக வாதாடும் இந்தோனேசிய சட்டவாளர் ஒருவரை மேற்கோள் காட்டி, “பெரும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவதாகவும் பழுதடைந்து போய்விட்ட உடல்கள் கிரமமாக கண்டுபிடிக்கப்படுவதாகவும் மக்கள் கூறுகிறார்கள். இந்தப் பகுதிகளிலே அறியப்படாதோரின் உடல்கள் பெருந்தோட்டங்களிலும் ஆற்றங்கரைகளிலும் கண்டுபிடிக்கப் படுகின்றன. ஒரு ஆற்றங்கரையில வேலைசெய்த தொழிலாளர்கள் எட்டுப்பேர் ஒன்றாகக் கட்டப்பட்டு, பாரம் கட்டப்பட்டு மூழ்கடிக்கப் பட்டிருந்ததை கண்டார்கள். அக்கு மீரா (Akue Mira)வில் பெரிய மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. துர்நாற்றம் ஒன்றை தொடர்ந்துசென்ற கிராமவாசிகள் திறந்த குழி ஒன்றிலே 200 சடலங்கள் கிடப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.” என்று ரோய்ட்டர் குறிப்பிட்டிருந்தது.

பெரும்தொகையான ஆச்சே மக்கள் ஏதிலிகளாக மலேசியாவுக்குத் தப்பியோடினார்கள். இந்த ஏதிலிகளில் பெரும்பாலானவர்களை மலேசியர்கள் திரும்பவும் இந்தோனேசியாவுக்கு அனுப்பி விட்டார்கள். அங்கே இவர்கள் உடனடியாக கைதுசெய்யப்பட்டு, சிறையிடப்பட்டார்கள். அல்லது கொலை செய்யப்பட்டார்கள். ஆனால், GAMஇன் கெரில்லாப் போராட்டத்தை முறியடிக்க இந்தோனேசியாவால் முடியவில்லை.




இந்தோனேசியா என்றவுடன் அது கிழக்குத்திமோரில் நிகழ்த்திய கொடூரங்கள்தான் எவருக்கும் நினைவுக்கு வரும்.

ஆச்சே மாகாணம் ஒரு டச்சு குடியேற்றநாடு என்பதால் கிழக்குத் திமோரில் இருந்து அது வேறுபட்ட அரசியல் தகுநிலையை கொண்டிருக்கிறது என்று இந்தோனேசியா நீண்ட காலமாகவே வாதிட்டு வருகிறது. சர்வதேச சமூகமும் குறிப்பாக மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் இந்த முட்டாள்தனமான வாதத்துக்கு தலையசைத்து வருவதாக ஆச்சே மக்கள் கூறுகிறார்கள். சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் முன்னைய போர்த்துக்கீச, ஆங்கிலேய, பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளுக்குத்தான் பொருந்தும், ஆச்சே போன்ற டச்சுக் குடியேற்ற நாடுகளுக்குப் பொருந்தாது என்பது போல் நடந்துகொள்கிறார்கள். ஐ.நாவினுடைய 1514(xv), 3314 (xxix), 2625(xxv) இலக்கத் தீர்மானங்கள் பிரித்தானிய, பிரெஞ்சு, போர்த்துக்கீச, ஸ்பானிய குடியேற்ற நாடுகள் தொடர்பாகவே நிறைவேற்றப்பட்டுள்ளன. டச்சு கிழக்கிந்திய மக்கள் இவற்றிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ கிழக்குத் திமோருக்கும் பௌத்த திபெத்துக்கும் பொருந்திப்போகின்ற நியாயங்கள் முஸ்லிம் ஆச்சேக்கும் கொசோவாவுக்கும பொருந்திப்போகாத காரணம் என்ன?

ஒரே ஆட்சியினால் கொடுமைப்படுத்தப்படுகின்ற இருவேறு இனங்கள் வெவ்வேறு முன்னைய குடியேற்றவாத நாடுகளின் கீழ் இருந்தவை என்பதால், உலக நாடுகளால் வேறுபட்ட விதத்தில் நடத்தப்படுவது எந்தளவு நியாயமானது என ஆச்சே மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

குடியேற்ற நாடுகள் தொடர்பான ஐ.நாவின் 2625(xxv) வது தீர்மானம் “ஒவ்வொரு குடியேற்றப் பிராந்தியமும் அவையவற்றுக்கான சட்டரீதியான தகுநிலைகளை (Juridical Status) கொண்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் சுதந்திரம் பெறும் உரிமை (Right Of Independence) உண்டு” என்று கூறுகிறது. இதற்கு முரண்பட்டதாகவே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு இருந்து வருகிறது என்று அம்மக்கள் முறையிடுகிறார்கள். தங்கள் முன்னோர்களின் குருதியை சிந்த வைத்து டச்சுக்காரர் கைப்பற்றிய குடியேற்ற நாடுகளான ஆச்சே, மொலுக்க, பப்புவா ஆகியவற்றை அவற்றின் முறையான உரித்தாளர்களுக்கு திருப்பிக் கையளிக்கப்படவில்லை என அவர்கள் குரலெழுப்புகிறார்கள்.

ஆனால், இந்தோனேசியா உருவாக்கப்பட்டபொழுது கிழக்குத்திமோர் அதன் பகுதியாக இருக்கவில்லை. ஜகார்த்தா இராணுவம் 1975ம் ஆண்டில்தான் கிழக்குத் திமோரை ஆக்கிரமித்தது. எனவே கிழக்குத் திமோருக்கு இருக்கின்ற சட்டபூர்வமான அடிப்படையோ சர்வதேச ஆதரவோ ஆச்சே போராட்ட இயக்கமான GAMற்கு இல்லையென்று இந்தோனேசியாவின் சர்வதேச நெருக்கடிகளுக்கான குழுவின் தலைவர் சிட்னி ஜோன்ஸ் கூறுகிறார்.

எது எவ்வாறாயினும் சுவிற்சர்லாந்தின் ஹென்றி டுனான்ற் மையத்தின் ஏற்பாட்டில் ஆச்சே விடுதலை இயக்கமான GAM இற்கும் இந்தோனேசிய அரசுக்குமிடையே மிக இரகசியமான பேச்சுவார்த்தைகள் ஜெனிவா நகரிலே 2000ம் ஆண்டிலிருந்து இடம்பெற்றன. ஆச்சேயின் நான்கு மில்லியன் மக்களுக்கு அதிக சுயாட்சி, 2004ல் மாகாண சட்டசபைக்கான தேர்தல், நிர்வாகம், விரோதங்கள் இடைநிறுத்தல், மாகாணத்தின் எண்ணெய்வள வருவாயில் எழுபது வீதமானவற்றை மாகாணமே வைத்துக்கொள்ளும் உரிமை முதலிய அம்சங்கள் அடங்கிய ஒப்பந்தமொன்று 2002.12.09ம் திகதி கையெழுத்தாகியது. ஒப்பந்தப்படி கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து ஆச்சே போராளிகள் தங்கள் ஆயுதங்களைக் கையளிக்கத்

- வி.அருளாளன் -

தொடங்குவார்கள் என்றும் அவற்றை சுவிஸ் நடுநிலையாளர்கள் தங்களுக்கு மட்டும் தெரிந்த இடத்தில் சேமிப்பார்கள் என்றும் இந்தோனேசிய இராணுவம் பாதுகாப்புநிலை அரண்களுக்கு பின் நகர்வார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இவ்வொப்பந்தம் கைச்சாத்தானபோது பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, ஜப்பான், சுவீடன், நோர்வே உள்ளிட்ட ஒன்பது நாடுகளின் தூதுவர்களும், சுவிற்சர்லாந்து நாட்டின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளும் பிரசன்னமாக இருந்தனர். டாக்டர். ஸெயனி அப்துல்லா தலைமையிலான ஆச்சே போராளி

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



www.eelamview.com

# குரங்குபாஞ்சான் தங்ககம் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டது

திருகோணமலை மாவட்டத்திலுள்ள குரங்குபாஞ்சான் என்ற காட்டுப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் முகாம் அகற்றப்படவேண்டும் என்று சிங்களப் படைத்தரப்பு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தது.

புலிகளின் முகாம் அமைந்துள்ள பகுதி படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்பது படைத்தரப்பின் வாதம்.

அத்துடன், இந்த முகாமை புலிகள் மிக அண்மையில் அதாவது போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் அமைத்துள்ளனர் என்றும் படையினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே இது போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக உள்ளது. ஆகவே, உடனடியாகவே இந்த முகாம் அகற்றப்பட வேண்டும் என்று படைத்தரப்பு முறைப்பாடு செய்திருந்தது.

படையினரின் இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் புலிகளிடம் கருத்துக் கேட்டிருந்தனர்.

படைத்தரப்பின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் புலிகள் நிராகரித்தனர்.

குரங்குபாஞ்சான் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம் என்பதையும் – அங்கே அமைந்துள்ள முகாம் நீண்ட பல ஆண்டுகளாக உள்ளது என்ற உண்மைகளையும் புலிகள் சான்றாதாரங்களுடன் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு விளக்கியிருந்தனர்.

எனினும், படைத்தரப்பின் குற்றச்சாட்டுக்களை சரியென ஏற்றுக்கொண்ட கண்காணிப்புக் குழுவினர், குரங்குபாஞ்சான் முகாமை அகற்றும்படி புலிகளிடம் கோரினர். அதற்குக் காலக்கெடுவும் விதித்திருந்தனர்.

கண்காணிப்புக் குழுவினரின் இந்தத் தீர்ப்பு நியாயமற்றது என்று கூறி அதை ஏற்க புலிகள் மறுத்துவிட்டனர்.

குற்றச்சாட்டுக்களை தீர விசாரிக்காமலும் – உண்மை எதுவென்று தீவிரமாக ஆராயாமலும் கண்காணிப்புக் குழுவினர் அவசரப்பட்டு தீர்ப்புக் கூறியுள்ளனர் என்பது புலிகளின் நிலைப்பாடாகும்.

இவ்வாறுதான் முன்னரும் காஞ்சூரன்குடா அதிரடிப்படையினர் தமிழ்மக்கள் மீது நடாத்திய கொலைத்தாக்குதல் சம்பவத்தை தீர விசாரிக்காமல் – படைத்தரப்பினர் தெரிவித்த காரணங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அப்பாவி மக்களைக் குற்றவாளிகளாக்கியது கண்காணிப்புக்குழு.

தமது முகாமைத் தாக்க புலிகள் இயக்கத்தினர் மக்களுடன் சேர்ந்து சிவில் உடையில் வந்தனர் என்று படைத்தரப்பு கூறியிருந்தது. முகாமினுள் புகுந்து தம்மைத் தாக்கியபோதே தாம் சுட்டதாக படையினர் தெரிவித்தனர். அதற்குச் சாட்சியாக முகாமின் உள்ளே இருந்த தமிழரின் உடல்கள் சிலவற்றையும் – எரியும் ரயர்களையும் கண்காணிப்புக் குழுவினருக்குக் காட்டினர். படையினர் கூறியது உண்மையென்று ஏற்றுக்கொண்டு – அவசரப்பட்டு அவர்களை நியாயப்படுத்தி கண்காணிப்புக்குழு அறிக்கையும் வெளியிட்டது.

ஆனால், படையின் காட்டிய தடயங்கள் அனைத்தும் தாம் செய்த படுகொலைகளை மறைக்க ஏற்படுத்திய செயற்கையான ஏற்பாடுகளே என்ற உண்மையை அப்பகுதி மக்களும் – பொது அமைப்புக்களும் நிரூபித்தன. முகாமுக்கு வெளியே வீதிகளில் இறந்துகிடந்த தமிழர்களின் உடல்கள் சிலவற்றையும் – வீதியில் எரிந்துகொண்டிருந்த ரயர்கள் சிலவற்றையும் இழுத்துவந்து முகாமினுள்ளே போட்ட படையினர் கண்காணிப்புக் குழுவினரை ஏமாற்றியிருந்தனர்.

இந்த உண்மை நிரூபிக்கப்பட்டதும் தமது முன்னைய அறிக்கையை மீளப்பெற்ற கண்காணிப்புக் குழுவினர் இரண்டாவது அறிக்கையை வெளியிட்டு தாமும் குழம்பி – உலகையும் குழப்பியிருந்தனர். அந்த அறிக்கையிலும்கூட கொலைக்காக படையினரை குற்றம் சாட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று புலிகளின் கப்பல் தகர்ப்புகள் தொடர்பாக சிங்களத் தரப்பை குற்றம்சுமத்த கண்காணிப்புக்குழு முனையவில்லை.

படைத்தரப்பின் முறைப்பாட்டை மிகக் கடுமையாகவும் – அவசரமாகவும் அணுகுமுறையும் கண்காணிப்புக்குழு, புலிகளின் முறைப்பாடுகளை அவ்விதம் நோக்க முயலாமைக்கான காரணம் புரியாமலேயே உள்ளது.

அண்மைக்காலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையினர் நடாத்தும் திடீர் வீதிச்சோதனைகள் – மக்கள் மீதான கெடுபிடிகள் – புதிய முகாம்கள், காவலரண்கள் அமைப்பது...... என்று சமாதான முயற்சிகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் வகையில் சிங்களப்படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்களில் சிலவற்றை சூழ்ந்துகொள்ளும் படையினர் அவற்றை சோதனையிட முனையும் போதும் – வீதியில் பயணிக்கும் புலிப்போராளிகளை உடற்சோதனையிட முனையும் போதும் படையினரின் ஆத்திரமூட்டும் இச்செயல்களை கண்காணிப்புக் குழுவினர் கண்டிப்பதும் இல்லை, அவற்றைத் தடுத்து நிறுத்த முயல்வதும் இல்லை.

செல்போன்களாலும் – தொலைபேசிகளாலும் நிரம்பிவழியும் குடாநாட்டில் தொலைத்தொடர்பு சாதனங்களைத் தேடவென்று புலிகளின் அலுவலகங்களை படையினர் சோதனையிட முயல்வது உள்நோக்கம் கொண்டது. புலிகளைச் சீண்டுவதே இதன் குறிக்கோள் ஆகும்.

இத்தகைய ஒரு சீண்டல் நோக்கத்துடன் படையினர் சோதனைபோட முனையும் வேளைகளில் "அவசியமற்ற நடவடிக்கைகள் இவை" என்று கூறி படைத்தரப்பிற்கு இடித்துரைப்பதற்குப் பதிலாக சோதனைகளுக்கு அனுமதிப்பது கண்காணிப்புக் குழுவின் நடுநிலைமையை கேள்விக்குள்ளாக்குகின்றது.

இவைபோன்றுதான் குரங்குபாஞ்சான் சம்பவப் பின்னணியும் உள்ளது.

இந்த முகாம், இரண்டாம் ஈழப் போரின் தொடக்கத்துடன் 1990இல், அந்த இடத்தில் அமைக்கப்பட்டதாகும். புலிகள் இயக்கத்தின் அப்போதைய ஆட்தொகைக்கேற்ப அது அளவில் சிறிய முகாமாக இருந்தது. காட்டோரத்தில் அது ஒரு இடைத்தங்கல் முகாமாகவும் செயற்பட்டது. குரங்குபாஞ்சான் பகுதிக்கு சிங்களப்படைகள் 2001ம் ஆண்டு ஒரு நகர்வைச் செய்திருந்தன. இதற்கு முன்னர் எந்தவொரு காலகட்டத்திலும் சிங்களப் படைகள் குரங்குபாஞ்சான் பகுதிக்கு வந்ததேயில்லை.

2001ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் குரங்குபாஞ்சான் பகுதியிலுள்ள எமது முகாமை அழிக்கவென படையினர் நகர்ந்துவந்தனர். அதை அவதானித்த புலிவீரர்கள் குரங்கு பாஞ்சானிலிருந்து ஒருசில கிலோமீற்றர்கள் தூரத்தில் வைத்தே படையினரை எதிர்கொண்டனர். அந்தச் சண்டையில் படைத்தரப்பு சந்தித்த சேதம் புலிகளுக்குத் தெரியாது. ஆனால், புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர். படையினர் பின்வாங்கியிருந்தனர். வீரச்சாவடைந்த இவ்விரு வீரர்களின் வித்துடல்கள் குரங்குபாஞ்சான் முகாமின் ஓர் பகுதியில் விதைக்கப்பட்டிருந்தது. அது இப்போதும் உள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்துடன் அவசியம் கருதி குரங்குபாஞ்சான் முகாமை பலம்வாய்ந்த நிலையாக புலிகள் அமைத்திருந்தனர். புலிகளுக்கும் சிங்கள அரசுக்குமிடையே கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்னரே குரங்குபாஞ்சான் முகாம் இருந்ததும் – அந்த முகாமை தாக்கவந்த படையினரை விரட்டியடித்த புலிகள் தொடர்ந்தும் அங்கேயே நிலைகொண்டு வருகின்றனர் என்பதும் படையினரே அறிந்த உண்மையாகும்.

அவ்வாறாயின், குரங்குபாஞ்சான் முகாமை புலிகள் அகற்றவேண்டும் என்பதில் சிங்களப் படைத்தரப்பு விடாப்பிடியாக உள்ளதன் மர்மம் என்ன? என்ற கேள்விக்கான விடை சூழ்ச்சிகளும் அபாயமும் நிறைந்தது.

சமாதான காலத்தைப் பயன்படுத்தி அத்துமீறிய குடியேற்றங்களை செயற்படுத்துவதில் படைத்தரப்பு அதிக ஆர்வம் காட்டுகின்றது. விடுதலைப்போராட்ட காலத்தில் காணாமல்போயிருந்த சில குடியேற்றங்கள் மீண்டும் வரத்தொடங்கியுள்ளன. திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தளவில் இந்த விவகாரம் பூதாகாரமாகவுள்ளது.

குரங்குபாஞ்சான் காட்டுப் பகுதியிலும் இவ்வாறானதொரு குடியேற்றத் திட்டத்தை ஆரம்பிக்க படையினர் விரும்புகின்றனர்.

குரங்குபாஞ்சான் பகுதியூடாக மகாவலி கங்கையின் கிளை ஆறாகிய உப்பாறு ஓடுகின்றது. இந்த ஆற்று வடிநிலத்தின் இருபுறத்திலும் அத்துமீறிய குடியேற்றத்தைச் செய்ய திருகோணமலைப் படைத்தலைமை விரும்பியது. ஆயினும், அங்குள்ள புலிகளின் முகாம் தங்களது திட்டத்தை அனுமதிக்காது என்பதும் படைத்தரப்பிற்கு நன்கு தெரியும்.

எனவேதான் சூழ்ச்சி ஒன்றின்மூலம் புலிகளின் முகாமை அகற்ற படையினர் முயன்றுள்ளனர்.

குரங்குபாஞ்சான் முகாமின் வரலாறு கண்காணிப்புக் குழுவுக்கு நேரடியாக விளங்கப்படுத்தப்பட்டது. இந்த முகாமின் நீண்ட ஆயுள்பற்றி மூதூர்ப்பகுதி மக்களுக்கும் நன்கு தெரியும். ஒரு பரந்துபட்ட விசாரணையை கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்டிருந்தால் இந்த உண்மை அவர்களுக்கும் புரிந்திருக்கும்.

இவற்றையெல்லாம் தீவிரமாகவும் – நிதானமாகவும் பரிசீலிக்காமல் எடுத்த எடுப்பிலேயே படையினரின் முறைப்பாடுகளை மட்டும் வைத்துக்கொண்டு கண்காணிப்புக் குழு தீர்ப்புக் கூறியுள்ளது புலிகளுக்கு ஏமாற்றத்தையும் – கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

**எல்லாளன்**

கண்காணிப்புக் குழுவினர் தங்களது தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

பேரம்பேசலுக்கும் – படைமிரட்டலுக்கும் அப்பால் வெகுதொலைவில், குரங்குபாஞ்சான்முகாம் உள்ளது என்ற உண்மையை படைத்தரப்பும் – கண்காணிப்புக் குழுவினரும் புரிந்துகொள்ளவேண்டும்.

சமாதானத்தின் பெயரால் எத்தனையோ விட்டுக்கொடுப்புக்களையும் – பொறுமை காத்தல்களையும் புலிகள் இயக்கம் செய்தாகிவிட்டது. குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டில் விட்டுக்கொடுத்தலுக்கும் – பொறுமை காத்தலுக்கும் இடமேயில்லை. ◆



1997ம் ஆண்டு காலப்பகுதியில் குரங்குபாஞ்சான் ஆற்றங்கரையில் விடுதலைப்புலிகளின் அணிகள்.
(ஒளிப்படக் காட்சியிலிருந்து எடுக்கப்பட்டது)

**குரங்குபாஞ்சான் முகாமின் வரலாறு கண்காணிப்புக் குழுவுக்கு நேரடியாக விளங்கப்படுத்தப்பட்டது. இந்த முகாமின் நீண்ட ஆயுள்பற்றி மூதூர்ப் பகுதி மக்களுக்கும் நன்கு தெரியும். ஒரு பரந்துபட்ட விசாரணையை கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்டிருந்தால் இந்த உண்மை அவர்களுக்கும் புரிந்திருக்கும்.**



www.eelamview.com

# அந்த வார்த்தைகளுக்காய்...

— துளசிச்செல்வன் —



எரிகிறது அல்லது வலிக்கிறது அல்லது நோகிறது எதைச் சொல்வது. இதைவிட உயிர்போகும் ரணவலி என்று சேர்த்துச் சொல்லலாம்... இப்படித்தான் அவனிற்கிருக்கிறது. இடதுகையிலும் இரண்டு கால்களிலுமே ரவைபட்ட காயங்கள். காயங்களின் வழியே இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. இரத்தத்தை தடுக்க சிறு துணிகளால் கட்டுப்போடக் கூட முடியவில்லை. இரத்தம் சொட்டுச் சொட்டாய் சிந்திக்கொண்டேயிருந்தது. அவனால் இராணுவத்தை பார்க்க முடிகின்றது. அங்குமிங்கும் கலவரம் படிந்த முகங்களுடன் அவர்கள் அலைந்து கொண்டிருந்தார்கள்.

இன்னும் இராணுவம் இவனைக் காணவில்லை. ஆனால் அவனையே இலக்கு வைத்துத் தேடுவதால் சில வேளை இனிக் கண்டுவிடலாம்.... தலையை மெல்ல அசைத்துப் பார்க்கின்றான் தலை அசைகிறது. அப்ப இன்னும் சாகவில்லை. நினைவிழக்கவில்லை. உயிர் இருக்கின்றது. அவனுள் நினைத்துக் கொண்டான். உடல் முழுதும் சோர்ந்து விறைத்துப் போயிருந்தது. கழுத்தளவு தண்ணீருக்குள் எவ்வளவு நேரம்தான் மறைந்திருப்பது. தலையை மெல்ல உயர்த்தி மூச்செடுப்பதும் பின் அமிழ்ந்து மறைவதுமாய் நீண்ட நேரம் பெரும் சிரமப்பட்டுக் கொண்டே நின்றான்.

இராணுவம் போவதாக இல்லை. 'உடல் சோர்ந்து மயங்கிக்கொண்டு போகிறேன்' என்ற உணர்வை மட்டும் அவனால் உணர முடிகின்றது. மயங்கினால் இந்தத் தண்ணீருக்குள்ளேயே.... அவன் சாவைப் பற்றி நினைக்கவில்லை. இராணுவத்தைத் தாண்டி வெளியில் இப்போது போய்ச் சேரவேண்டுமே. குமுதன் தன் கடைசி மூச்சில் சொன்ன அந்த இரண்டு வரிகள்... அவை எப்படியும் உரிய இடத்தில் சொல்லப்பட்டே ஆகவேண்டும்.

நினைவுகள் மங்கிக்கொண்டிருந்தது. உடல் முழுவதுமாய் சோர்ந்துவிட்டது. போய்ச் சேரவேண்டும் என்ற உணர்வு மட்டும்தான் மிஞ்சியிருந்தது. இராணுவம் விலகுவதாக இல்லை.

காயப்பட்டதால் சிதைந்து தொங்கிக் கொண்டிருக்கும் தசைகளை மீன்கள் கடித்தது. 'மீன்களுக்குக் கொஞ்சம்கூட இரக்கம் இல்லை.' ஒரு கையைத்தான் அசைக்க முடிகிறது. மூன்று இடங்களில் காயம், எப்படி மீன்களைக் கலைப்பது? காலை அசைத்தால் எதிரி கண்டு விடுவான்.

'ஐயோ' அப்படியே நின்றான். மீன்கள் காயத்தை கொத்திக் கொத்தித் தசைகளை இழுக்கின்றன. கரையில் இராணுவம் கண்களால் தூண்டில் போட்டு அவனையே தேடுகின்றது. அவன் மரத்தைப்போல் நின்றான். ஆனாலும் உடலும் உணர்வுகளும் மரத்துவிடவில்லை.

அவன் இந்த தேசத்திற்காக தன்னையே அர்ப்பணித்துவிட்ட கரும்புலி வீரனல்லவா? தேசத்திற்காகத் தன் வேதனையைப் பொறுத்துக்கொண்டான். மெல்ல மெல்ல அவன் நினைவுகள் சோர்ந்து தன்நிலை மறந்தான். பின் திடுக்குற்று விழிப்புற்றான். அது நித்திரையோ? மயக்கமோ? அவனால் உணர முடியவில்லை. இரண்டும் தாராளமாய் அவனது உடலில் வந்திருக்கலாம் இரண்டு இரவுகளாக மூடாத கண்கள், மூன்று காயங்களின் வழியே உடலில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் குருதி, தண்ணீரின் குளிர்.... இத்தனையும் இருக்க எவ்வளவு நேரம்தான் உடலை மனத்தால் கட்டுப்படுத்தி வைத்திருப்பது?

நினைவுகள் மங்கிக்கொண்டு போக கண்களுக்குள் சில முகங்கள் சிரித்தபடி, கோப அனல் தெறித்தபடி; சுபேசன், குமுதன், குமரேஸ், ஆசா, செங்கதிர் இன்னும் எத்தனையோ முகங்கள்... அவற்றின் அசைவுகள்... அது கனவுதானா? அல்லது மனதில் மாறாமல் கடைசியாக பதிந்த காட்சிகளா? சில கனவுகள் காட்சிகளைப் போலவும். காட்சிகள் கனவுகளைப் போலவும் நடந்து முடிந்துவிட்ட சில மணித்துளிகளை என்னவென்று சொல்வது? நினைவுகள் சொட்டுச் சொட்டாய் வழிந்து கொண்டிருந்தன. நடந்து முடிந்த காட்சிகள் மனதில் படச்சுருளாக விரிந்தன.

* * *

பிரதான இலக்குகளை நெருங்கிச் செல்வதற்காக இருந்த சிறுதடை. அந்தத் தடைக்கம்பிகளை வெட்டி மெல்ல மெல்ல ஒவ்வொருவராய் தடைதாண்ட, எதிரியின் சூட்டை எதிர்பார்த்துத் தம் கனரக ஆயுதத்தோடு புற்களினுள் மறைந்தபடி இவனும் இன்னுமொருவனும். அணிகள் முதலாவது தடையை வெட்டி இரண்டாவது தடைக்குச் செல்ல வேறு முகாம் ஒன்றினுள் நுழைந்த அணிகள் தாக்குதலை ஆரம்பித்துவிட்ட சத்தங்கள் கேட்டதும், எதிரி எங்கும் உசாரடைந்து விட்டான். தடையை 'டோப்பிற்றோ' வைத்து உடைத்து அணிகள் உள்நுழைய முன்னரே காவலரணில் இருந்து சூடுகள் வந்தன. அந்தச் சூடுகளிலேயே இவனது இரண்டு கால்களிலும் ரவைகள் பட்டுவிட்டன. காயத்தைக் கவனிக்காமல் அந்தக் காவலரணில் இருந்து வந்த சூடுகளை இவனது ஆயுதத்தால் அடக்கிவிட்டான்.

காயத்தைப்பற்றி கதைப்பதற்கு, ஏன் நினைப்பதற்கே நேரமில்லை. வேகமாக உள்நுழைந்து இலக்குகளைத் தேடினார்கள். இலக்குகள் இடம் மாற்றப்பட்டுவிட்டன. எதிர்பார்த்து வந்தது அங்கே கிடைக்கவில்லை. கிடைத்த இலக்குகளைத் தகர்க்கத் தொடங்கினார்கள். எதிர்ப்புகள் வந்த திசைநோக்கி சுட்டுச்சுட்டு எல்லோரும் முன்னேறினார்கள். மாடிவீடு, தகரவீடு, கட்டடங்கள் இப்படி பல பகுதிகளில் இருந்துவந்த சூடுகளை அவனின் கனரக ஆயுதம் நிறுத்தியது. ஆனையிறவின் மையப் பிரதேசத்தினுள் அந்த அணிகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருந்தன.

சுபேசன்... எல்லோரையும் இறங்கும்படி கட்டளையிட்டபடி முன்னே செல்ல பக்கவாட்டாக இருந்து சுபேசனை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார்கள் இராணுவத்தினர். "சுபேசண்ணை பக்கவாட்டா அடிக்கின்றான்" கத்திக்கொண்டு பக்கவாட்டாக தன் துப்பாக்கியை திருப்பினான் அன்பு. சுபேசனும் பக்கவாட்டில் திரும்பி தாக்குதல் செய்தான். மறுநொடி அதிலேயே காயப்பட்டு விழுந்துவிட்டான். அதற்குப்பின், சுபேசனின் உடலில் அசைவு எதுவும் அவனிற்குத் தெரியவில்லை. பக்கவாட்டாக சுட்டுவிட்டுத் திரும்ப இடது கையில் காயம் பட்டுவிட்டது. காயம்பற்றி நினைக்காது தனது பணியை அங்கே செய்து கொண்டிருந்தான். காயப்பட்டவர்கள், வீரச்சாவடைந்தவர்கள் இடைவெளியை நிரப்பி இலக்குத் தேடினான். இல்லை, இலக்கைக் காணவேயில்லை.

பின்வாங்கும்படி கட்டளை கிடைத்தது. அணிகள் பின் வாங்கத்தொடங்கின. பின்வாங்கத் திரும்பியபோது அவனது கண்ணில் குமுதன் தெரிந்தான். தாண்டிக்குளச் சண்டைக்கும், கரிப்பட்ட முறிப்பு 'ஹெலி' அடித்த தாக்குதலிற்கும் அவனையெல்லாம் தலைமை தாங்கி அழைத்துச் சென்றவன். இப்பவும் அப்படித்தான். நல்ல மென்மையான அந்தத் தோழனை விட்டுவர மனமில்லாது தன் ஆயுதத்தோடும் காயத்தோடும் அவனைத் தூக்கியவாறு முகாமிற்கு வெளியே வந்தான். சண்டைச் சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருந்தன. குமரேசும் வழியில் காயப்பட்டுக் கிடந்தான். கடைசித் தடைவரையும் பழரின்னைக் கையில் வைத்துக் கொண்டு பம்பலாக சாப்பிட்டுக்கொண்டு வந்தவன். இப்போதும் அவன் அதைக் கைவிட்டிருக்க மாட்டான். சண்டை ஆரம்பிக்கலாம் என்றபோதுதான் அதை பாக்கினுள் வைத்துவிட்டு சண்டைசெய்த சின்னவர்களைப் போன்ற போராளி. குழந்தை முகம் அவனும் பின்வாங்க நினைக்கவில்லை. அவர்களைக் கண்டபோது அவனின் முகத்தில் சிறு மலர்ச்சி. ஏதோ ஆதங்கம். குமுதனின் நிலை மோசமாகியது அதைவிடப் பொழுது விடியத் தொடங்கிவிட்டது விடிந்தால் யாரும் நிற்கவோ, பின்வாங்கவோ முடியாது.

"நான் சக்கை இழுக்கப்போறன் நீங்கள் போங்கோ" குமுதன் கூறினான். கட்டளையா? அன்பா? எதுவென்றாலும், அதில் அவனால் எதையும் செய்ய முடியவில்லை. எப்படிச் செய்வது? மனசு வெடித்துவிடும் போல இருந்தது. இருந்தாலும் குமுதன் சக்கையை எடுத்து வெடிக்கத் தயார் செய்து கொண்டதும் அது வெடிக்காது என்ற சமிக்கைக்கான மின்குமிழ் எரிந்தது. வேறு வழியில்லை அவன் தனது சக்கையை எடுத்து இருவரும் சேர்ந்து நின்று வெடிப்பதற்குத் தயாராக குமுதன் மறுத்துவிட்டான். அந்தச் சாவின் விளிம்பிலும் எத்தனை உன்னத உணர்வுகள். தன்னைவிட தேசத்தை நினைக்கின்ற புனிதமான எண்ணங்கள். "நீங்கள் போக வேணும். போய் நடந்ததை சொல்லவேணும் அது இன்னொரு சண்டைக்கு உதவும்" குமுதன் மெதுவாக, ஆனால் உறுதியாக முணுமுணுத்தான். அவ்வளவுதான். அதைமீறி அவன் என்ன செய்வது? யோசிக்க நேரமில்லை. குமுதன் இன்னொரு சாச்சரை இழுக்க மெல்ல அவனைப் பிரிந்து நடந்தான். சிறுதூரம் சென்றிருப்பான். பெரும் சத்தம், குமுதன்... அடுத்த பெரும் சத்தம் குமரேஸ்...

காற்றில் பறந்த அவர்களது தசைகள் மீண்டும் மண்ணில் விழுந்தன. பாரமான நெஞ்சோடு நடந்து கொண்டேயிருந்தான். கால்களும் கைகளும் வலித்துக்கொண்டிருந்தன. இன்னொரு இடத்தில் செங்கதிர். அவனும் காயப்பட்ட நிலையிலேயே. செங்கதிரைக் கைத்தாங்கலாக பிடித்துக்கொண்டு புகையிரத வீதி கடந்து சிறிது தூரம் வர பூவரச மரங்கள், அந்த இடத்திற்கு அப்பால் நகரவே முடியாமல் போய்விட்டது. மயக்கம் இருவரும் குண்டையும் குப்பியையும் வைத்துக்கொண்டு படுத்துவிட்டனர்.

பின் மயக்கம் தெளிந்தோ, தூக்கம் கலைந்தோ விழித்தபோது, நன்றாக விடிந்திருந்தது. செங்கதிரை பார்த்தான். இன்னும் எழுந்துவிடவில்லை. அந்த சுற்றாடலைச் சுற்றி அவதானித்தான். இனி இராணுவம் தேடுதலிற்கு வரலாம். அவனையும் எழுப்பி அழைத்துக் கொண்டு சற்று தள்ளியிருந்த ஈச்சம் பற்றை மறைவில் ஒழித்துக் கொள்கிறார்கள். செங்கதிரிடம் நேரமென்ன எனக் கேட்டான். அவன் கடிகாரத்தைப் பார்த்து 7.20 எனக் கூறியதும் சிறிதுநேர மௌனம். நாய்கள் தூர குலைப்பது கேட்டது. அவன் பற்றைகளை விலக்கிப் பார்த்தான். இராணுவம்!!!

எதிர்பார்த்ததுபோல தேடுதல் வேட்டை, தப்ப முடியாது மோப்ப நாய்கள், தூர இருந்து மெல்ல மெல்ல அவர்களை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. அவைகளோடு இராணுவம். செங் கதிருக்கு தண்ணீர்த் தாகம். கொஞ்சத் தண்ணீராவது கேட்டு கெஞ்சிக் கொண்டிருந்தான். இந்த நிலையில் எங்கே தண்ணீர் எடுப்பது? "தண்ணீ... கொஞ்சமெண்டாலும் தண்ணீ..." அவனால் தாகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இரத்தப் பெருக்கால் நாக்கு வறண்டு உதடுகள் காய்ந்து போய்விட்டன. நீங்கள் இதுக்குள்ளை இருங்கோ என்று செங்கதிரை மறைத்துவிட்டு அவனிடம் தன் குண்டுகளில் ஒன்றையும் கொடுத்துவிட்டு தவழத்தொடங்கினான் தண்ணீர் தேடி.

இராணுவம் கிட்ட வந்துவிட்டது. செங்கதிர் இருந்த பற்றை நோக்கிப் போகிறது. பார்க்கிறார்கள். அந்தத் திசையிலேயே சுடுகிறார்கள். ஒவ்வொரு பற்றைகளை நோக்கியும் அவர்கள் சுட்டார்கள். செங்கதிர் இருந்த பற்றைக்குள் இராணுவம் நுழைகின்றது. பெரிய குண்டுவெடிச் சத்தம். 'செங்கதிர்' மனதிற்குள் எண்ணிக்கொண்டு இவன் மறைந்தபடி மெல்லமெல்ல தவழ்ந்தான். ஒரு சிப்பாய் கண்டுவிட்டான்! இவனது குண்டு பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்டே இருந்தது.

சிப்பாய் சுட்டான் அது படவில்லை. வழமையாக எல்லாப் பற்றைகளிலும் சுடுவதால் மற்றவர்கள் விழிப்படையவில்லை. இவன் சடக்கட வேகமாகத் தவழ்ந்து இன்னொரு மறைப்புக்குள் மாறினான். காயப்பட இன்னும் சில இடங்கள் இருக்கின்றன. அதுவரையும் முயற்சி செய்வோம் என்ற திடத்தோடு தன் முயற்சியை தவறாது தொடர்ந்தான். தவழ்ந்து தவழ்ந்து வந்தவனிற்கு தண்ணீர்ப்பரப்பு தெரிந்தது. 'தண்ணீர்' இவ்வளவு நேரமும் செங்கதிர் கேட்டுக் கொண்டிருந்த தண்ணீர்... அதற்குள்ளேயே மீன்கள் காயத்தைக் கொத்தி இழுக்க நினைவு கலைந்தான். அதைப்போல, ஒவ்வொரு நினைவும் மாறாது கொத்திக் கொத்தி இழுப்பது போலிருந்தது.

* * *

நினைவுகளிலிருந்து திரும்பி தலையை மெல்ல உயர்த்தி எங்கும் பார்த்தான். இராணுவத்தினர் போய்விட்டனர். உலங்கு வானூர்தி தாளப் பறந்து அந்தப் பகுதியில் எதையோ தேடிக்கொண்டிருந்தது. நேரம் 3.00 மணி இருக்கும் இராணுவத்தினர்

(11ம் பக்கம் தொடர்ச்சி)





www.eelamview.com

# தேசிய எழுச்சிப்பேரவை
# ஒரு வலுவான மக்கள் கட்டுமானம்

சு. அரசண்ணா

தமிழீழத்தில், தமிழ்பேசும் மக்களினது தேசிய ஆன்மாவை வெளிப்படுத்தும் மக்கள் அமைப்பாகத் தேசிய எழுச்சிப்பேரவை முகிழ்த்துள்ளது. அம்மக்களின் அடிமன விருப்புக்களை ஆற்றுப் படுத்தி, அவர்களின் உரிமை வாழ்வு, விடுதலை வாழ்வு, சுதந்திர வாழ்வு என்பனவற்றைக் குறியாகக்கொண்டு, தமிழ்பேசும் மக்களின், தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றை வென்றெடுக்கும் முனைப்புடன் தேசிய எழுச்சிப்பேரவை உருவாக்கம் பெற்றுள்ளது.

1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர் எழுச்சிக்குழு என்னும் பதாகையின் கீழ் தமிழ்பேசும் மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பினில் ஒன்றிணைந்தனர். அவ்வொன்றிணைவின் மூலம் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் வரலாற்றுச் சிறப்புப் பேர்பெற்ற பல வீரமிகு போரியல் சாதனைகளுக்கு உறுதுணையாகி உழைத்தனர்.

இன்று தமிழீழ நிலப்பரப்பில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தேசிய எழுச்சிப் பேரவையின் வரலாற்றுப் பிறப்பிலும் அணிதிரண்டுள்ளனர்.

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பல்வேறு பங்களிப்புகளில் வலுமிக்க ஒன்றாகத் தேசிய எழுச்சிப் பேரவையுள்ளது. அத்துடன் அது தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் புலப்படுத்துகின்றது.

வெகுமக்கள் நடவடிக்கைகளை வழிநடத்திச் வெல்வதோடு மக்களின் ஆரோக்கியமான முன்னேற்றத்திற்கு நிறைவுடன் உழைக்கும் அடிப்படையில் இப்பேரவை தன் இயக்க நிலையை வகுத்துக்கொண்டுள்ளது எனலாம். எனினும், அது தனது உள்ளடக்கத்தில் தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்த விடுதலையை, அதாவது எல்லாவித ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுதலைபெற்ற ஓர் உயர்குணாம்ச சமூக விடுதலையை இலட்சியமாக வரித்துள்ளது.

தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காகப் போரிட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை முழு வியாபகங்களுடன் கட்டியெழுப்பிய தமிழீழ தேசியத் தலைவர், போர் எழுச்சிக்குழுவின் உருவாக்கத்திற்கு வழிசமைத்தது போன்று, இன்று சமாதான காலத்தில் பேரவையின் உருவாக்கத்திற்கு இடமளித்துள்ளார். 'இலட்சியத்தால் ஒன்றுபட்ட உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.' என்னும் அவரின் சிந்தனைக்கு அமைய, இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களின் செயற்படு தளமாக இப் பேரவை விளங்குகிறது.


தமிழ்பேசும் மக்களினது இன்றைய தேவைகளின் எழுச்சிகளை ஆற்றுப் படுத்தி அரணிப்பு மிகுந்த சூளுரைகளோடும், பலம்மிகுந்த முன்னெடுப்புப் பிரவாகத்தோடும் வெகுமக்களின் நடவடிக்கைக் குணாம்சப் பக்குவங்களோடும் வழிநடத்திச் செல்லவல்ல அமைப்பாக தேசிய எழுச்சிப்பேரவை இயங்கும்.

இதனை அதன் இன்றைய வெளிப்பாடுகள் புலப்படுத்துகின்றன.

அடிமட்ட மக்கள் மத்தியில் இருந்து மக்கள் அமைப்புகள் கட்டியெழுப்பப் பெறல் வேண்டுமென்ற உயரிய சிந்தனைக்கு ஏற்ப இவ்வமைப்பு கட்டியெழுப்பப் பெறுகிறது.

வடதமிழீழத்தின் மாவட்டங்களில், ஊரக, பிரதேச, கோட்ட பேரவைக் கிளைகளின் ஆட்சிக் குழுக்கள் (நிர்வாகக் குழுக்கள்) தெரிவுசெய்யப் பெற்றுள்ளன. யாழ் மாவட்டத்தில் மாவட்டமட்டக் கிளையின் ஆட்சிக்குழுவும் தெரிவுசெய்யப் பெற்றுள்ளது. (அதன் முன்னெடுப்பில் தான் அண்மையில் பளைமகாவித்தியாலயத்தில் யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சகலமட்டக் கிளைகளினதும் பேராளர் மாநாடு நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது)

ஒரு கிராமசேவை அலுவலர் பிரிவுக்குள் வசிக்கும் மக்களுக்குள் இருந்து ஊரகக் கிளையின் பொதுச்சபை உறுப்பினர்கள் உள்வாங்கப்பெற்று இக்கிளையின் ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பெறும். இவ்வாட்சிக்குழு உறுப்பினர்கள் அம்மக்கள் மத்தியிலுள்ள சகல அம்சத்தினரையும் உள்ளடக்கக் கூடியவாறு தெரிவு செய்யப்பெறுவார்கள். இவ்வாட்சிக்குழுவில் இருந்து பிரதிநிதிகள் பிரதேசமட்ட அல்லது கோட்டமட்ட பேரவைக்கிளையின் பொதுச்சபை உறுப்பினர்களாக இடம்பெறுவார்கள். அப்பொதுச்சபையில் இருந்து அதன் ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பெறும். இவ்வாறே மாவட்டமட்ட, தேசியமட்ட பொதுச்சபைகளும் ஆட்சிக் குழுக்களும் கீழிருந்து மேல் என்னும் வகையில் தெரிவு செய்யப்பெறும். அவ்வாறு தெரிவுசெய்யப்பெற்ற பின் தேசிய மட்டக் கிளைகளினூடாக மேலிருந்து கீழ் என்னும் வகையில் சகலமட்டப் பேரவைக் கிளைகளையும் நெறிப்படுத்திச் செல்லும்.



தேசிய எழுச்சிப் பேரவைக்கோ அல்லது அதன் எந்தவொரு ஆட்சிக் குழுவிற்குமோ தலைவர் என்னும் பதவி இல்லை. செயலாளரே அத்தேவையை ஈடுசெய்யும் வகையில் செயலாற்றுவார். மேலும் இவருடன் துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோரும் பொருத்தமான எண்ணிக்கையில் ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் பெறுவார்கள்.

தேசியமட்ட ஆட்சிக்குழுவின் செயலாளருடன் அவரின் செயலாற்றுகைக்கு வழிகாட்டியாக, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் விளங்குவார். அதே போன்று மாவட்டமட்ட ஆட்சிக் குழுக்களின் செயலாளர்களுக்கு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் விளங்குவார்கள்.

தமிழீழ மக்களின் அரசியல் வேணவாக்களை நிறைவேற்ற அயராது உழைக்கும் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் தமிழீழ மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாக தேசிய எழுச்சிப் பேரவை அமையும்.

தமிழ்பேசும் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, சுதந்திரம் ஆகியவற்றைப் பேணி, அவற்றின் அடிப்படையில் தமிழ்பேசும் மக்களின் சமூக, பொருண்மிய, பண்பாட்டுத் தளங்களைப் பேணலும் விரிவாக்கலும் குறிக்கோளாகக் கொள்ளப்பெறும்.

தமிழ்பேசும் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றைப் பேணும் கொள்கையினை நிறைவேற்ற திட்டங்களை வகுத்துச் செயற்படுதல்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல், சமூக, பொருண்மிய, பண்பாட்டு வாழ்நிலையை மேம்படுத்தும் முகமாக பொருத்தமான வேலைத்திட்டங்களை வகுத்து, செயற்படுத்தி, கண்காணித்து, மீளாய்வு செய்து நிறைவேற்றல் என்பவற்றை இப் பேரவை நோக்கங்களாகக் கொண்டியங்கும்.

இவ்வாறாக இயங்கும் தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகள் பின்வரும் தலைப்புகளில் அமையும்.

1) அரசியற் செயற்பாடுகள்.

- விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளான கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள், தனிநபர் சந்திப்புகள் இன்ன பிறவற்றை மேற்கொள்ளல்.
- கருத்துப்பரம்பலுக்கு புதிய கட்டமைப்புகளை ஏற்படுத்தல்.
- ஊடகங்களை ஏற்றவகையில் பயன்படுத்தல்.
- சர்வதேச முற்போக்கு சனநாயக சக்திகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

2) சமூக செயற்பாடுகள்.

- மக்களை ஒன்றிணைத்து அவர்களை வழிநடத்தும் சமூக அமைப்புகளான சனசமூக நிலையங்கள், ஊரக மேம்பாட்டு நிலையங்கள், பொது நூல்நிலையங்கள் போன்றனவற்றை உருவாக்குதல், மறுசீரமைத்தல்.
- துறைசார் தொழிற்சங்கங்களை உருவாக்குதல், மறுசீரமைத்தல், வலுவூட்டுதல்.
- மனிதவள மேம்பாட்டிற்கான செயல் திட்டங்களை நிறைவேற்றல்.
- கல்விசார் விழிப்புணர்வை வளர்த்தல், கல்வி அமைப்புகளுடனான தொடர்புகளை ஏற்படுத்தி அனுசரணையாக ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- பாதிப்புற்றோருக்கான நிவாரணப் பணிகளை ஊக்குவித்தல்.
- மக்களிடையே சமூக, வர்க்க ஏற்றத் தாழ்வுகளை நீக்க உழைத்தல், குறிப்பாக சாதியம், மூட நம்பிக்கைகளை இல்லாதொழிக்கப் பணியாற்றுதல்.
- மனித விழுமியங்களை வளர்தெடுக்கும் கலைபண்பாட்டுத் தரத்தை உயர்த்துதல்.
- வரலாறு, அறிவியல் போன்ற துறைசார் அறிவினை மேம்படுத்தல்.
- சுகாதார, மருத்துவ நடைமுறைகளை முன்னெடுத்தல், விரிவாக்குதல்.
- உடல் உள மேம்பாட்டிற்காக விளையாட்டுத்துறையினை ஊக்குவித் தல்.
- சுற்றுப்புறச்சூழல், சூழல் மாசடைதல் பற்றிய விழிப்புணர்வை வளர்த்தெடுத்தல், சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுவூட்டல், அருகும் விலங்கினங்கள் பறவைகள் பாதுகாப்பினை ஊக்குவித்தல்.
- மாவீரர், போராளிகளது குடும்ப நலனை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்.
- சமூகத்தில் நலிவுற்றோர், ஆதரவற்றோர், முதியோர், உடல் உள வலுக் குன்றியோர், பின்தங்கிய சிறார் என்போர் நிலையான மேம்பாடுகாண உழைத்தல்.
- தமிழ்பேசும் மக்களது வாழ்வுநிலை பாதிப்புறாவகையில் மனித உரிமைகள் மற்றும் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு ஆகியனவற்றை உறுதிப்படுத்த உதவுதல்.

3) பொருண்மிய மேம்பாட்டுச் செயற்பாடுகள்.

- தமிழ்பேசும் மக்களது தாயகத்தின் பொருண்மிய அடிப்படைகளாகிய விவசாயம், கடல்வளம், தெங்கு பனைவளம், கால்நடை வளர்ப்பு என்பனவற்றின் விரிவாக்கப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அனுசரித்தல்.
- பொருள் உற்பத்தி முறைகளைச் சீராக்கவும், உழைப்பினை மேம்படுத்தவும் சந்தையை ஒழுங்குபடுத்தவும் அனுசரணையைத்தருதல்.
- சிறுகைத்தொழில் ஊக்குவிப்பை மேற்கொள்ளல்.
- பொருண்மிய உட்கட்டுமாணங்களான நீர்ப்பாசனக் குளங்கள், வாய்க்கால்கள், வடிகால் அமைப்புகள், கட்டடங்கள் ஆகியவற்றை மறுசீரமைக்க, உருவாக்க மக்கள் அமைப்புகளின் பங்காற்றுதலுக்கான வழிகாட்டுதல், ஆலோசனைகள் வழங்குதல்.
- பொதுச் சேவைகளான போக்குவரத்து, மின்சாரம், தபால், தொலைத்தொடர்பு போன்ற அனைத்தும் மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கப் பாடுபடல்.
- நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பொதுமக்களை எட்ட ஒத்துழைத்தல்.

மேற்படி செயற்பாடுகள் ஊடாக மக்களது கூட்டுழைப்பை வலுவூட்டி தற்சார்புப் பொருண்மியத்தை மேம்படுத்தல்.

இவ்வாறாக தேசிய எழுச்சிப்பேரவை தனது செயற்பாடுகளை நெறிப்படுத்தியுள்ளது. இவற்றுடன் இப்பேரவை, தனது பணி முன்னெடுப்புக் களங்களில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய பொறுப்பாளர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்திக்கச் செய்வதுடன் கலந்துரையாடும் வாய்ப்புகளையும் உருவாக்கி வருகிறது. இத்தகைய சந்திப்புகள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது.

தென் தமிழீழத்திலும் மக்கள் மேம்பாட்டுக்குழு எனும் பெயரில் தமிழ்பேசும் மக்களுக்காகச் செயற்படும் அமைப்பும் அதன் கிளைகளும் ஏற்ற இடங்களில் ஏற்றவாறு அமைக்கப்பெறுகின்றன. பல இடங்களில் அமைப்பு வேலைகள் முடிவுற்று அவற்றின் செயற்பாடுகளும் தொடங்கிவிட்டன. அவற்றின் அளப்பரிய பங்காற்றுதல்களை அண்மைக்காலங்களில் அவதானிக்க முடிகின்றது.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டப் பாதையில் வரலாறும் காலமும் உருவாக்கிய தலைவரின் முன்னெடுப்புத்தான், தேசிய எழுச்சிப்பேரவையும், மக்கள் மேம்பாட்டுக்குழுவும் ஆகும். தமிழ்பேசும் மக்களின் மகோன்னத மேம்பாட்டிற்கு அயராது உழைப்பது இவற்றின் இடைவிடா முயற்சிகளாகும்.

“விடுதலைப்போராட்டம் என்பது மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்றுதிரண்டு, ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சிகொண்டு போராட்டத்தில் பங்களிக்கும்போது எமக்கு வெற்றி நிச்சயம்” என்ற எமது தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனை வழிகாட்டிச்செல்ல ஒன்றுதிரண்டு எழும் மக்களின் பணிகள் தமிழினத்தின் பெரும் பலமாக இனிவரும் காலங்களில் அமையும். ●



www.eelamview.com

# நூலக எரிப்பும் அரச பயங்கரவாதமும்.

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

**"சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை"**

*- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*

ஒரு இனத்தின் பண்பாட்டுச் செய்திகள் அவ்வினம் பேணிப் பாதுகாக்கும் நூலகங்களிலும் அரும்பொருள் காப்பகங்களிலும் காணப்படுகின்றன. இவை இன அடையாள வடிவங்களாகவும் பண்பாட்டு அளவீடுகளாகவும் அமைகின்றன. நூலகமும் அரும்பொருள் காப்பகமும் நெருங்கிய தொடர்புடையவை. இலண்டன் மாநகர், வத்திக்கான் ஆகியவற்றில் இருவகையும் ஒரே கட்டடத் தொகுதியில் இயங்குகின்றன.

'இலண்டன் மியூசியம்' (London Museum) என்று அழைக்கப்படும் பிரித்தானியாவின் நூலகம் மற்றும் அரும்பொருள் காப்பகம் ஒன்றிணைந்த அமைப்பு மறைந்த பிரிட்டிஷ சாம்ராச்சியத்தின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக அமைகின்றது. நவீன உலகின் மிகப் பழமைவாய்ந்த இவ்வகை அமைப்பாக அது கருதப்படுகின்றது. 370அடி நீளமான இப்பிரமாண்டமான கட்டடத்தினுள் இரு மில்லியனுக்கும் மேற்பட்ட அரிய நூல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. கட்டடத்தின் உட்பகுதியில் குறுக்குச் சுவர்கள் கட்டப்படவில்லை. புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இறாக்கைகளும் அலமாரிகளும் குறுக்குச் சுவர்களாக நிற்கின்றன. இவற்றை ஒரு நேர்கோட்டில் நிறுத்தினால் அவை இருபத்தைந்து மைல்தூரம் நீளுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வத்திக்கான் நூலகத்தின் புத்தக இறாக்கைகளையும் அலமாரிகளையும் மேற்கூறியவாறு நிறுத்தினால் அவை எட்டுமைல் தூரம் செல்லும் என்று தெரிவிக்கிறார்கள். இன்றைய உலக ஒழுங்கில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தேசிய நூலகம் என்ற விகிதத்தில் கட்டியெழுப்பப்படுகின்றது. அந்த நாட்டின் உயர்வை மதிப்பிடுவதற்கு அது உதவுகின்றது. அந்த நாட்டுடன் தொடர்புடைய வரலாற்றுச் செய்திகளின் வைப்பகமாகவும், அதனுடன் தொடர்புபட்ட ஆவணக் காப்பகமாகவும் தேசிய நூலகங்கள் செயற்படுகின்றன. பிரித்தானியாவின் தேசிய நூலகமான இலண்டன் மியூசியம் தன்னகத்தே பிரித்தானியா உலகிற்கு நல்கிய பாராளுமன்ற ஆட்சிமுறையின் ஆரம்பகட்ட ஆவணமான 'மக்னா காட்டா'வின் (Magna Carta) மூலப்பிரதியைக் கொண்டுள்ளது.

கத்தோலிக்க மதத்தின் தலைமைப் பீடமாக விளங்கும் வத்திக்கான் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பிய தரைப்பரப்பின் பெரும்பகுதியை ஆட்சி செய்தது. 108.7 ஏக்கர் நிலப்பரப்புடைய வத்திக்கான் உலகின் மிகச்சிறிய நாடாக இருப்பினும் அங்கு பொதிந்துள்ள அறிவியற் செல்வங்கள் அளவிட முடியாத பெறுமதி வாய்ந்தவை வத்திக்கான் நூலகம் 16ஆம் நூற்றாண்டில் இன்றைய வடிவம் பெற்றது.

நூலகங்கள் தோன்றிய வரலாறு மிகவும் தொன்மையானது. மனித குலத்தின் வற்றாத அறிவுத் தாகத்தின் சின்னமாக அவை விளங்குகின்றன. சென்ற காலத்துடன் நிகழ்கால மனிதனைத் தொடர்புபடுத்தும் நூல்கள் அவனுக்கு எதிர்காலம் நோக்கிய பாதையைக் காட்டுகின்றன. ஆராய்ச்சிக்கும் கண்டு பிடிப்புக்கும் நூல்கள் ஆதாரமாக அமைகின்றன. ஆராய்ச்சிக்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நூலகங்கள் கல்விமான்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் ஒப்பற்ற வரப்பிரசாதமாக இடம் பெறுகின்றன. உலகின் மிகப்பெரிய கண்டுபிடிப்புக்களில் பெரும்பாலானவை இத்தகைய நூலகங்களில் ஆரம்பமாகின.

அமெரிக்காவின் தேசிய நூலகம் 'லைப்பிறரி ஒப் கொங்கிரஸ்' (library of congress) என்ற பெயருடன் தலைநகர் வாஷிங்ரனில் நிறுவப்பட்டுள்ளது. இங்கு பதினைந்து மில்லியன் வரையிலான நூல்களும் சஞ்சிகைகளும் வைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவை நுண்படப் (microfilm) பிரதிகளாக மாற்றப்பட்டு மீள்பார்வைக்கு உதவும் தொழில்நுட்ப வசதிகளுடன் சேமிக்கப்பட்டுள்ளன. உலகில் வெளிவந்த முக்கிய ஆக்கங்களின் இரு பிரதிகளை இந்த நூலகம் கொள்வனவு செய்து வைத்திருக்கிறது. இன்றும் இந்த நடைமுறை தொடர்கின்றது.

யாழ்.தீபகற்பத்துடன் நெருங்கிய தொடர்புடைய அமெரிக்கக் கல்விமான்களும் மதகுருமார்களும் தமது சேவைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகிய இந்துசாதனம் / 'இந்து ஓர்கன்', ஈழகேசரி, உதயதாரகை, மோர்னிங் ஸ்ரார் போன்ற பத்திரிகைகளை நுண்படப் பிரதிகளாக மாற்றியிருந்தனர். யாழ்.நூலகம் எரிந்து சாம்பராகிய பின் இவை அமெரிக்க அரசினால் தமிழர்களுக்கு சம்பிரதாயபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய லைப்பிறரி ஒப் கொங்கிரசிலுள்ள தேசிய நூலகப்பட்டியல் மூலம் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலுள்ள 700 நூலகங்களில் சேமிக்கப்பட்டுள்ள அரிய நூல்கள் பற்றிய முழு விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இந்த முறையில் எட்டு மில்லியன் நூல்களின் இருப்பிடத்தை ஒரு நொடிப்பொழுதில் கண்டுபிடிக்கலாம். அமெரிக்க நிலைப்பாடு பற்றிய உலகம் தழுவிய பிரச்சாரத்தின் ஒரு அங்கமாக நூற்றுக்கும் மேலான உலக நாடுகளின் தலைநகரங்களிலும் பிற முக்கிய நகரங்களிலும் அமெரிக்க அரசு தனது கிளை நூலகங்களைத் திறந்துள்ளது. யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட நான்காம் குறுக்குத் தெருவில் அமெரிக்க நூலகக் கிளை இயங்கியது நினைவிருக்கலாம். விடுதலைப் போர் ஆரம்பமாகியவுடன் அது மூடப்பட்டுவிட்டது. மீண்டும் அமெரிக்க நூலகத்தை யாழ்.நகர எல்லைக்குள் திறக்கும் முயற்சிகள் அண்மைக் காலமாக எடுக்கப்படுகின்றன. இப்படியான நூலகங்கள் அமெரிக்க தகவல் பரிமாற்றச் சேவையின் ஒரு அங்கமாகக் கருதப்படுகின்றது. இதன் காரணமாக இந்த நூலகங்கள் அமெரிக்கத் தகவல் மையம் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளின் நூலகங்களிலும் பிறமொழிக் காப்பகங்களிலும் தமிழ் ஏடுகள் காணப்படுகின்றன. மேற்கு ஜேர்மனியின் ஹலே (halle) சிறுநகரின் நூல்நிலையத்தில் இரண்டு இலட்சம் வரையிலான தமிழ் ஏடுகள் குவிந்து கிடக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் மோகனவேலு எழுதிய 'ஜேர்மனியில் கிடைத்த தமிழ் புதையல்' என்ற நூலில் ஜேர்மனியர்கள் செய்த தமிழ்த் தொண்டு பற்றிய செய்திகளும் ஜேர்மனியில் கிடைக்கும் தமிழ் ஏடுகள் பற்றிய தகவலும் காணப்படுகின்றன. சீகன் பால்க் (ziegen balg) என்ற ஜேர்மன் பாதிரியார் நீதி வெண்பா, திருமந்திரம் உள்ளிட்ட பல் செல்லரித்த ஏடுகளை திருத்தம் செய்ததோடு கி.பி 1708 இல் கொன்றை வேந்தன், நீதி வெண்பா, உலகநீதி போன்ற தமிழுக்கே உரித்தான நீதி இலக்கியத்தை ஜேர்மன் மொழிக்கு மாற்றினார்.

எம்மை ஆட்சிசெய்த போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் நாடுகளிலும் தமிழ் ஏடுகளும் தமிழர் வரலாற்றோடு தொடர்புடைய மூலாதாரங்களும் காணப்படுகின்றன. பிரெஞ்சுத் தலைநகர் பாரிசில் பல நூற்றாண்டிற்கு முன் தமிழ் ஆய்வுகள் நடத்தப்பட்டதாக அறிகிறோம். இவர்கள் பாண்டிச்சேரியை ஆட்சிசெய்த காரணத்தால் தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டனர். கடல்கடந்த தமிழர்கள் வாழும் மலாயா, இந்தோனேசியா, இந்தோசீனம், மொறிசியஸ், தென் ஆபிரிக்கா, பிஜீத்தீவு, மியன்மார் போன்ற நாடுகளிலும் இத்துறைசார் ஆய்வுகள் மேற்கொண்டால் பயன்கிட்டும்.

நூலக வரலாற்றில் நாம் தவறாது கவனிக்கவேண்டிய முக்கிய விடயமொன்று இருக்கின்றது: நூலகம் ஒரு பிரதான தேசிய அடையாளம் என்ற காரணத்தால் அதற்கு ஆக்கிரமிப்பாளர்களால் ஆபத்துநேரும் வாய்ப்பு நிறைய உண்டு. இத்தொடர்பில் இன்னுமொரு கூற்று இருக்கின்றது. பிறமொழி வளர்க்கும் அந்நியர்களுக்குச் சமதையாக பிறமொழி அழிக்கும் அந்நியர்களும் காணப்படுகின்றனர். இதுபற்றிச் சற்று ஆராய்வோம்.

தஞ்சாவூரை ஆட்சிசெய்த மராட்டிய மன்னர்கள் தமிழ் வளர்ப்பதிலும் சரஸ்வதி மகால் என விளங்கும் உலகப் பிரசித்திபெற்ற தஞ்சாவூர் நூலகத்தை உருவாக்கி மேம்படுத்துவதிலும் ஈடுபட்டனர். மராத்திய மன்னனான இரண்டாம் செர்போஜி (serfoji -ii , 1798-1832) இந்த நூலகத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவந்தான். கலை, விஞ்ஞானம், இலக்கியம் சம்பந்தமான பழம்பெரும் ஏடுகளை இவன் தேடிப்பெற்று சேமித்து வைத்தான். 52,000 புத்தகங்களும் 43,000 கையெழுத்துப் பிரதிகளும் இங்குள்ளன. 1692இல் அச்சேறிய தமிழ் நூலின் மூலப்பிரதியை இங்கு காணலாம். 1801இல் தயாரிக்கப்பட்ட நூல் பட்டியல் ஓலை ஏடும், 1807இல் எழுதப்பட்ட நூல் பட்டியல் கையெழுத்துப் பிரதியும் சரஸ்வதி மகாலில் வைப்பில் உள்ளன. மகாபாரதத்தின் மிகப் பழமை வாய்ந்த ஓலைச் சுவடியை இங்கு காணலாம்.

தஞ்சாவூரில் மராத்திய மன்னர்கள் நூலகம் வளர்த்த இக்காலகட்டத்தில் மைசூரில் திப்பு சுல்தான் ஆதரித்த பிரமாண்டமான நூலகத்தை ஆங்கிலேயர்கள் சிதைத்தனர். மைசூர் மன்னனான திப்பு (Tippoo Sultan, 1750-1799) பிரிட்டிசாரைக் கடுமையாக எதிர்த்துப் போராடியவன். 1799இல் நடைபெற்ற இறுதிப்போரில் ஒரு தளபதியின் காட்டிக் கொடுப்பால் சாவடைந்தான். இதன்பின் திப்புவும் அவருடைய தந்தை கைதர் அலியும் கட்டியெழுப்பிய நூலகம் உட்பட மைசூரின் பெறுமதிமிக்க சொத்துக்களை ஆங்கிலேயர்கள் சூறையாடி அழித்தனர். இந்த நூலகத்திற்குரிய நூல் மற்றும் ஏட்டுப்பட்டியல் மாத்திரம் இப்போது சரஸ்வதி மகாலில் வைக்கப் பட்டுள்ளது.

எதிரிகளின் நூலகம் அரும்பொருள் காப்பகம் போன்றவற்றை அழிக்கும் மரபு இன்றும் தொடர்கின்றது. ஈராக் அமெரிக்கப்படைகள் வசம் வீழ்ந்த பின் தலைநகர் பாக்தாத் நூலகங்களும் காப்பகங்களும் அமெரிக்கப் படைகளின் மறைமுக ஆதரவுடன் சூறையாடப்பட்டன. இது நடைபெற்ற 14 ஏப்பிரல், 2003ஆம் நாள் மனித நாகரிக வரலாற்றில் கரிநாளாக கருதப்படுகின்றது. மனித வரவாற்றின் ஆரம்ப நிலையங்களில் ஒன்றான ஈராக்கின் செல்வங்கள் மிலேச்சத்தனமாக அழிக்கப்பட்டுள்ளன. 13ஆம் நூற்றாண்டில் ஜெங்கிஸ்கானின் பேரன் இதைப்போன்ற அழிப்பை அப்போதைய ஈராக்கின் மீது படையெடுத்து நடத்தினான்.



ஆயிரம் வருடங்களுக்கு மேலாக அரபு உலகின் கலாசாரத் தலைநகரமாக பாக்தாத் திகழ்ந்தது. மத்திய கிழக்கின் கல்விமான்களில் மிகக் கூடுதலானோர் ஈராக்கில் வாழ்கின்றனர். புதைபடிவ ஆய்விலும், அதன்மூலம் பெற்ற விலைமதிப்பற்ற புராதன கலைவடிச் சேமிப்பிலும் ஈராக் முதலிடம் வகிக்கின்றது. 'அல்குரான' சம்பந்தமான வரலாறு உள்ளடங்கிய தனியொரு நூலகமும் 2003இல் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது.

ஈழத்தமிழர் வரலாற்றின் ஆரம்ப கட்டக் கரி நாட்களாக 1981 மே 31, ஜூன் 01 ஆகியவை இடம்பெறுகின்றன. இந்த இரு நாட்களில் யாழ்ப்பாண நகரமும், சுன்னாகம் போன்ற சிறு நகரங்களும் கொழுந்துவிட்டு எரிந்தன. 48 மணி நேரத்தில் யாழ் பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகை காரியாலயம், கொக்குவில் நாச்சிமார் கோயில் உட்புறமும், கோயிலை அண்டிய பல வீடுகள், யாழ் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வீடும் அவருக்குச் சொந்தமான நூலகமும், தமிழர் கூட்டணி கட்சிக் காரியாலயம், யாழ் கஸ்தூரியார் வீதிக் கடைகள், யாழ் பஸ்தரிப்பு நிலையத்தைச் சுற்றியுள்ள பெரும்பாலான கடைகள், தனியாருக்குச் சொந்தமான மூன்று புத்தகக் கடைகள், எண்ணற்ற தனியார் மோட்டார் வாகனங்கள், மிதிவண்டிகள் என்பன சீருடைதரித்த பொலிசாராரும் சீருடை தரியாத காடையர்களாலும் பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்டன.

யாழ் நகரின் முதலாவது தீ வைப்பு 1977 ஆகஸ்து 15ஆம் நாள் நடைபெற்றது. இதையும் சிங்களப் பொலிசாரே செய்தனர். 1981ஆம் ஆண்டின் தீ வைப்பில் இராணுவத்தினர் ☞



www.eelamview.com


கணிசமானளவு பங்களிப்புச் செய்தனர். 1981இல் அப்பாவிகளைச் சுட்டுக்கொல் லும் நடைமுறை தீவிரமாக்கப்பட்டது. தமது சொத்துக்களை பாதுகாப்பதற்காக தீயணைக்கும் உத்தேசத்துடன் வந்த கடை உரிமையாளர்கள் பொலிசாரா லும் இராணுவத்தினராலும் படுமோசமா கத் தாக்கப்பட்டு விரட்டப்பட்டனர். 1981இல் சொத்தழிவுகள் பல கோடி ரூபாய்க்களைத் தாண்டின. பொலிசார் மற்றும் இராணுவத்தினரைவிட இன்னு மோர் அணியினர் 1981 தீ வைப்பில் பங்கேற்றனர்.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் தெற்கின் தேர்தல் தொகுதிகளில் 'யாழ் நகரை எரிக்க வாரீர்' என்ற கோசத் துடன் ஆட்சேர்ப்பு நடைபெற்றது. இதற்கான பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர். அரச திணைக்களங்களுக்குச் சொந்த மான வாகனங்களும் புகையிரத வண்டி களும் வடக்கு நோக்கிய பயணத்திற்கு உதவின. 'குடிநீரும் உணவும் எடுத்துச் செல்லுங்கள், தட்டுப்பாடு வரலாம்' என்று பயணத்தை நெறிப்படுத்தியோர் எச்சரிக்கை விடுத்தனர். இவர்கள் யாழ்வந்து சேர்ந்ததும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருடன் இரண்டறக் கலந்த னர். யாழ்.நகரிலுள்ள வெளிநாட்டு மது விற்பனை நிலையங்கள் முத்தரப்பினரின் தேவைகளை இலவசமாகப் பூர்த்தி செய்தன.

கொள்ளை அடிப்பதில் முத்தரப்பின ரும் சமபங்கேற்றனர். கைகளில் ஒன்று க்கு மேற்பட்ட கடிகாரங்களைக் கட்டி யபடி அவர்கள் கடை உடைப்பில் ஈடு பட்டனர். அரசுக்குரிய சொத்துக்களை நாசமாக்காமல் பார்த்துக்கொண்டனர். யாழ் எம்பியின் வீட்டைக் கொழுத்துமுன் அதற்கு முன்னால் கிடந்த மின்சார சபைக்குச் சொந்தமான மின்கம்பி உருளைகளைப் பிறிதோர் இடத்திற்கு நகர்த்தினர். தனியார் கடைகளைச் சூறையாடியபின் கொழுத்தியவர்கள் கூட்டுறவுக் கடைகளை விட்டுவைத்த னர். தனியார் வீடுகளிலுள்ள நூல் தொகுதிகள், புத்தகக் கடைகள் போன்ற வற்றை அழிப்பதில் விசேட கவனம் எடுத்தனர். யாரோ சக்திவாய்ந்த மனிதர் கள் இந்த நாசவேலையை இயக்கினார் கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தல்கள் (Distric Development Council Elections) யாழ்.மாவட்டத்தில் 1981 ஜூன் 04ஆம் நாள் நடைபெற்றன. தேர்தல் நடைபெற முன்பே யாழ் நகரில் அந்நியர்களின் நடமாட்டம் மிகவும் கூடுதலாகக் காணப்பட்டது. ஆளும் யூ.என்.பி கட்சி எதுவிதத்திலும் தேர்தல் வெற்றிபெறவேண்டும் என்பதில் குறியாக இருந்தது. வெற்றி பெறக்கூடிய நிலை யில் இருந்த கூட்டணியினரை வீழ்த்த வேண்டும் என்பதில் அது முனைப்பாக இருந்தது. கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் சிறில் மத்தியூ, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா ஆகியோர் யாழ்.மாவட்டம் தமது கட்சிக்குக் கிடைக்கவேண்டும் என்பதில் விசேட அக்கறை எடுத்தனர்.

1981 மே 30ஆம் நாள் கொக்குவில் நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பித்த தீவைப்புக்களும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களும் கன்னாகம் ஊடாக காங்கேசன்துறை வரையும் அதே வேகத் தில் யாழ்நகர மையப்பகுதிக்கும் பரவி யது. தேர்தல் பாதுகாப்பிற்காகப் பிற மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப் பட்ட 400 வரையிலான பொலிசார் துரை யப்பா விளையாட்டரங்கிலும் அதற்கு அருகாமையிலும் தங்கவைக்கப்பட்டிருந்த னர். தேர்தல் பணிகளுக்கு உள்ளூர் தமிழ் அதிகாரிகள் அழைக்கப்படவில்லை. சிங் களவர்கள் மாத்திரம் சிங்கள மாவட்டங் களில் இருந்து சேவைக்கு அமர்த்தப்பட்டி ருந்தனர். இவர்களோடு தென்னிலங்கைத் தேர்தல் தொகுதிகளில் இருந்து திரட்டப் பட்ட காடையர் கூட்டமும் இணைந்து



கொண்டனர்.

30ஆம் திகதி ஒரு ஞாயிற்றுக் கிழமை. அன்று நடந்த கலவரங்களின் கொடூரத்தை அவதானித்த யாழ். அரசா ங்க அதிபர் யோகேந்திரா துரைசாமி விடுமுறையென்றும் பாராது கொழும்புடன் தொடர்புகொண்டார். இதன் பயனாக அடுத்த நாள் திங்கட்கிழமை அதிகாலை (ஜூன் - 01) பொலிஸ்மா அதிபர் அனா செனவிரத்னா விசேட உலங்குவானூர்தி மூலம் துரையப்பா விளையாட்டரங்கில் வந்திறங்கினார்.

இவரை விட வடபுல இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் வீரதுங்கா முதல்நாள் இரவு ஏற்கனவே வந்து விட்டார். பாதுகாப்பு அமைச்சகச் செயலா ளர் கேணல் சி.ஏ.தர்மபால, ஜெனரல் செபால அட்டியகல ஆகியோரும் வந்த னர். காணி, காணி அபிவிருத்தி அமைச் சர் காமினி திசாநாயக்கா, கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் இதே மைதானத்தில் வந்திறங்கினர். (ஜூன் - 01)

இத்தனைபேரும் யாழ்ப்பாணத்தில் நிற்கும்போது திங்கட்கிழமை பகல் முழுவ தும் யாழ்ப்பாணத்தில் பதற்றம் நிலவியது. மாலை தணிந்துவிட்டதுபோல் ஒரு தோற்றம் தெரிந்தது. ஆனால் ஈழத்தமிழர் கள் வாழ்வில் மிகப்பெரிய துயரச் சம்ப வம் இரவில் நடைபெற்றது. யாழ். பொது சன நூலகத்தின் கதவுகளைக் கொத்தித் திறந்த துரையப்பா விளையாட்டரங்கில் தங்கியிருந்த பொலிசாரும் பிற காடையர் களும் நூலகத்தின் எல்லாப் பகுதிகளுக் கும் பெற்றோல் ஊற்றினர். அதன்பின் தீயிட்டனர். யாழ் பொலிஸ் நிலையத்தி ற்கு 700யார் தூரத்தில் நூலகம் காணப் படுகிறது. நூலகத்திலிருந்து 250யார் தூரத்தில் துரையப்பா விளையாட்டரங்கு இருக்கின்றது. நூலகம் எரியூட்டப்படும் போது இரவு 10.00மணி. அங்கு நின்ற நூலகக் காவலரை விரட்டிவிட்டு தீ வைப்பு நடைபெற்றது.

யாழ்.மாவட்டங்களில் நடந்த கொலை, கொள்ளை, தீவைப்புக்கள் என்பவற்றை விசாரணை செய்வதற்காக ஜூன் 12ஆம் நாள் பொலிஸ் விசார ணைக்குழு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர்.சுந்தரலிங்கம் தலைமையில் யாழ்ப் பாணம் வந்துசேர்ந்தது. இந்த விசார ணைக்குழு முன் சாட்சியமளித்த நூல கக் காவலர் விக்கினேஸ்வரன் தனது வாக்குமூலத்தில் "பொலிசார் பின் மதிலால் குதித்து அப்பால் விளையாட் டரங்கு நோக்கிப் போனார்கள். அதேசமயம் அவ்விடம் வந்துசேர்ந்த இராணுவத்தினர் எரியும் நூலகத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டு, நூல் நிலையக் கண்ணாடி யன்னல்களை நோக்கி கற்களை வீசினார்கள்" என் றார்.

இதே விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த அப்போதைய மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவ ஞானம் "யாழ். விளையாட்டரங்கில் தங்கியிருந்த பொலிசாரே யாழ் நூல் நிலையத்திற்கு தீ வைத்திருக்க வேண்டும்" என்றார். அதே இரவில் 'ஈழநாடு' பத்திரிகைக் கட்டடம், அச்சு இந்திரங்கள், ஆவணக் காப்பகம் என்பனவும் தீயிட்டு அழிக்கப்பட்டன. நூலக எரியூட்டலை அமைச்சர் காமினி திசாநாயக்கா நெறிப்படுத்தினார் என்று ஈழத் தமிழர்கள் உறுதியாக நம்புகின்ற னர். அவருக்குப் பக்கத்துணையாக நின்றவர் கொழும்பில் இருந்து வந்து சேர்ந்த யூ.என்.பி கட்சியின் முக்கிய உறுப்பினரும் பிற்காலத்தில் கொழும்பு மேஜர் பதவி வகித்தவருமான கணேச லிங்கம் என்பவராவார்.

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்ரர் ஐவான் பின்வரும் செய்தியைக் கூறுகின்றார்: "நூலக எரியூட்டலைத் தடுக்காமல் அதற்குத் துணைபோன நீ ஒரு தமிழனா" என்று நான் கேட்ட போது "ஒரு சின்ன விளையாட்டு என்று நினைத்தேன். இப்படி வருமென்று நான் நினைக்கவில்லை" என்று கணேச லிங்கம் பதில் கூறினார். எரியூட்டலுக் குப்பின் பிரித்தானிய எம்.பிக்கள் சிலர் ஜெயவர்த்தனாவுக்கு ஆட்சேபத் தந்தி களை அனுப்பினர். இதற்கு அவர் "உங்கள் வேலையை நீங்கள் பாருங் கள், எங்களைப் பற்றிய கவலை உங்க ளுக்கு வேண்டாம்" என்று பதிலளித் தார். செப்ரெம்பர், 1982இல் இந்தியா ருடே பத்திரிகை ஆசிரியர் எஸ்.வெங் கட் நாராயணன் கொழும்பு வந்தார். நூலக எரிப்பு சம்பந்தமாக அவர் ஜெய வர்த்தனாவை வினவியபொழுது மிகவும் அலட்சியமாக அவர் விடையளித்தார்.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள மிகப் பெறுமதிவாய்ந்த நூலகங்களில் ஒன் றான யாழ். நூலக எரியூட்டலில் 97,000 கிடைத்தற்கரிய தமிழ், ஆங்கில நூல் கள், தமிழ், ஆங்கிலப் பெரியோர்களின் கைபெழுத்துப் பிரதிகள், 40,000 வரையி லான இலக்கியம், மருத்துவம், சோதிடம் சம்பந்தமான ஓலைச்சுவடிகள், யாழ்ப் பாணத்து முதுபெரும் தமிழ், ஆங்கில பத்திரிகை சேமிப்புக்கள் என்பன முற் றாக எரிந்து சாம்பராகின. நூலகக் கட்ட டம் பெரும் பொருட்செலவில் திராவிட கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட் டிருந்தது.

ஓலைச்சுவடிகளின் பெறுமதிபற்றி சிராணி குணவர்த்தனா என்பவர் தனது ஆய்வு நூலில் பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார். (Palm Leaf Manuscripts Of Srilanka By Siranee Gunawardane) "அவை வரலாற்று ஆவணங்கள். மக்க ளின் தோற்றம், அறிவியல் வளர்ச்சி, மொழிவளர்ச்சி என்பனவற்றின் வெளிப் பாடாக அமைவதோடு, அந்த மக்கள் கூட்டத்தின் தேசியச் செல்வமாகவும் ஓலைச்சுவடிகள் அமைகின்றன." இன அழிப்பானது ஒரு இனத்தின் தேசிய வாழ்வையும் தேசியப் பெறுமானங்களை யும் சிதைப்பதையே நோக்காகக் கொண்டது என்கிறார் இன அழிப்புப் பற்றிய ஆய்வாளர் றப்பேயல் லெம்கின் (Raphel Lemkin).

பதினேழு வருடகாலம் (1977-94) நீடித்த யூ.என்.பி அரசு தமிழர்கள்மீது நடத்திய பாரிய வன்முறைகளில் 81இன் நூலக எரிப்பு உள்ளடங்கலான யாழ் தீபகற்ப எரிப்பும் 83இன் நாடு தழுவிய தமிழர் படுகொலைகளும் சொத்தழிப்புக் களும் மேலோங்கி நிற்கின்றன. யாழ். நூலகம் பற்றிய அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்த இவ்வரசு 1990இல் சிங் கள மக்களின் தேவைகளுக்காக புத்தம் புதியதோர் தேசிய நூலகம் மற்றும் ஆவணக் காப்புமையம் என்பவற்றை (The National Library and Documentation Centre) கொழும்பில் கட்டியெழுப்பி யுள்ளது. எமது சொத்தை அழித்தவர்கள் தமது சொத்தை மேம்படுத்துவதில் காட்டும் தீவிர கவனத்தை இதன்மூலம் அறியலாம்.

யூ.என்.பியைத் தொடர்ந்து ஆட்சி க்கு வந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தனது பதவிக்காலத்தில் (1994-2001) யாழ். நூலக விவகாரத்தைத் தனது அரசியல் இலாபத்திற் காகப் பயன்படுத்தியது. எரிப்புக்குப் பொறுப் பான அரசின்மீது கரி பூசுவதற்கும் தமிழர் கள் மீது ஒரு போலி யான பரிவைக் காட்டு வதற்கும் எமது நூலகம் பயன்பட்டது. மீண்டும் பதவிக்கு வந்த பழைய யூ.என்.பியின் மறு பதிப் பான ஐக்கிய தேசிய முன்னணி அரசு படுவேகமாகச் செயற் பட்டு சிதைந்த கட்டடத்தைப் பூசிமெழுகி வடுக்களை மறைத்துவிட்டது. தான் வைத்த தீயின் அடையாளங்க ளைத் தானே மறைப்பதற்கு இது ஒப்பாகும்.


சிதலமடைந்த நூலகம் அப்படியே ஒரு நினைவுச் சின்னமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவேண்டும். இதற்காக உழைக்க நாம் தவறிவிட்டோம். இரண் டாம் உலகப்போரில் விமானக் குண்டு வீச்சில் சேதமடைந்த ஜேர்மன் தலை நகர் பேர்ளினின் கோபுரம் முறிந்த கூர் பூர்ஸ்ரன்டாம் தேவாலயம் (Kurfurstendamm Kirche) திருத்தப்படாமல் நிற்கிறது. அதன் பக்கத்தில் புதிய தேவா லயம் கட்டப்பட்டுள்ளது. இவ்வுதாரண த்தை நாம் பின்பற்றியிருக்கலாம். ●

ஏரியூட்டலுக்குப் பின் பிரித்தானிய எம்பிக்கள் சிலர் ஜெயவர்த்தனாவுக்கு ஆட்சேபத் தந்திகளை அனுப்பினர். இதற்கு அவர் "உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள், எங்களைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்" என்று பதிலளித்தார். செப்ரெம்பர், 1982இல் இந்தியா ருடே பத்திரிகை ஆசிரியர் எஸ் வெங்கட் நாராயணன் கொழும்பு வந்தார். நூலக எரிப்பு சம்பந்தமாக அவர் ஜெயவர்த்தனாவை வினவியபொழுது மிகவும் அலட்சியமாக அவர் விடையளித்தார்.



www.eelamview.com

# புலர்வின் வெளிச்சங்கள்




நேற்றுத்தான் அவர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அம்மாவின் பிள்ளைகளின் வரலாற்றுக் குறிப்புகளை எழுதுவதற்காக. அம்மாவின் புன்னகையும் குரலும் மாறவில்லை. ஆனால், கவலைகள் வயோதிபத்தை விரைவாகக் கொண்டுவந்திருந்தன. தன் பிள்ளைகளின் வரவுக்காய் ஏங்கும் விழிகளில் பார்வை மங்கியிருந்தது. 'அவர்கள் வரமாட்டார்கள்' என்ற மன அழுத்தத்துடன் தனிமையுடன் சமரசம்செய்து வாழ்ந்துகொண்டிருக்கும் அம்மாவும் எமது விடுதலை வரலாற்றில் பதிக்கப்பட வேண்டியவரே. அன்றொரு நாள் அடுப்படியில் என்னையிருத்தி சுடச்சுட நெய்த்தோசை சுட்டுத் தந்ததை என் நினைவுகளினூடே மீட்டிப் பார்க்கிறேன். நான் சாப்பிட்டு முடிவதைப் பார்த்து மறுதோசையை தட்டில் வைத்துவார்; நான் சுடச்சுட சாப்பிடவேண்டும் என்பதற்காக. (என்னை யாரென அவருக்குத் தெரியாது தெரிந்ததெல்லாம் 'நான் ஒரு போராளி' என்பது மட்டுமே.)

கண்களில் பார்வை மங்கியிருப்பினும் இன்று என்னை அடையாளம் காண்பது அம்மாவுக்குச் சிரமமாக இருக்கவில்லை. அம்மாவின் வீட்டுச் சுவரில் அப்பாவின் படம் தொங்கியது. சிறப்பாக வாழ்ந்ததன் பெருமை அவர் முகத்தில் தெரிந்தது. அப்பா இலங்கை வங்கி முகாமையாளராக பணியாற்றிய காலத்தில் சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழ்ந்தவர். அவர்களுடனான அப்பாவின் நல்லுறவே 1956இல் சிங்களக் காடையர்களின் வன்செயலின்போது உயிரை அவர் உடலுடன் வைத்திருந்தது. அவர் அடிக்கடி கூறுவது இதுதான் "சிங்கள மக்கள் நல்லவர்கள் - அவர்களை வழி நடத்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய அதிகாரம் படைத்த பரம்பரையினரின் மூன்றாம்தர அரசியல் செயற்பாடே இத்துணைப் பிரச்சினைகளுக்கும் காரணம்" அப்பா அரசியல் தெளிவு உடையவர். தமிழீழத் தனியரசின் விடுதலையை ஆத்மபூர்வமாக நேசித்தவர். தமிழரசுக் கட்சிக் கூட்டங்களுக்குத் தவறாமல் செல்லும்போது தன் பிள்ளைகளையும் கூட்டிச்செல்ல மறப்பதில்லை. 'குடும்பம்' என்ற குறுகிய வட்டத்துக்கப்பால் அறிவியல், சமூகம், அரசியல், மனிதம் என எல்லாவற்றையுமே தம் பிள்ளைகளுக்கும் ஊட்டினார்.

அம்மா கூறுவதுபோல்; "தனது பிள்ளைகளுக்கு கல்வி அறிவூட்டி சீரிய பண்புகளுடன் வளர்த்தெடுத்து சமுதாயத்தில் அவர்களை நற்பிரசைகளாக்கியதில் அவருக்கே பெரும் பங்குண்டு. அதனால்தான் எனது பிள்ளைகளும் சீரிய தலைமைத்துவமும், கட்டுப்பாடும், ஒழுக்க மேம்பாடும் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்றனர்."

1956இல் சிங்களக் காடையர்களின் வன்செயல் அப்பாவுக்கு ஆயுதப்போரின் தேவையை உணர்த்தியது என்றால், 1983இல் சிங்கள காடையர்களின் வன்செயலானது பிள்ளைகளுக்கும் உணர்த்தியது என்பதே அவர்களின் வரலாறு சொல்லும் செய்தி. விடுதலைப் போர் அடிவானில் மேலெழுந்தபோது அதன் கதிர்களை எரிக்கவென மூட்டிய தீ தமிழினத்தின் மீதான வன்செயலாக பரிணமித்தபோது கொழும்பில் பட்டயக்கணக்காளராக (cima) மேற்படிப்பு படித்துக்கொண்டிருந்த அப்பாவின் மூத்தவன் அரவிந்தன் (யாழ்வேந்தன்) யாழ்பாணம் கப்பலேறிய தமிழ்மக்களுடன் ஒருவனாக மீண்டும் யாழ்மண் வந்துசேர்ந்தான்.

அண்ணன் வந்திறங்கிய மாதத்திலேயே அடுத்தவன் (தம்பி) ரவீந்திரன் (தாகூர்/சங்கர்) விடுதலைப் பாதையில் பயணிப்பதற்காகத் தன்னை முழுமையாக புலிகள் அமைப்பில் இணைத்துக்கொண்டான். மூத்தவன் அரவிந்தன் மேலதிக கல்விக்காக பிரித்தானியாவுக்குப் பயணமாகிய திங்களில் ரவீந்திரன் படையியற் பயிற்சிக்காக பாக்குநீரிணையை கடந்தான். 1986இல் அடுத்தவன் (இரண்டாவது தம்பி) மணிவண்ணன் விடுதலைப்பாதையில் பயணிப்பதற்காக புலிகள் அமைப்பில் தன்னையும் முழுமையாக இணைத்துக்கொண்டான். மேற்கொண்டு கற்பதற்காக பிரித்தானியாவுக்கு பயணித்த அரவிந்தனும் அதே ஆண்டில் அங்கிருந்தபடியே தன்னையும் புலிகள் அமைப்பில் இணைத்துக்கொண்டான்.

சிங்கள இனவெறியில் நேரடியாக உறவுகளின் இழப்பினையோ அழிவுகளையோ சந்திக்காத இப்பிள்ளைகள் "வாழ்வோடு பொருந்திய அறிவை ஊட்டி செல்வச் செழிப்புடன் வளர்த்த தாய், தந்தை உறவுகளைப் பிரிந்து தமது மக்களின் நல்வாழ்வுக்காக, விடுதலைக்காக பயணிக்கவேண்டிய பாதையில் சுமக்கவேண்டிய சுமைகளை சுகமாகச் சுமந்து உறுதியாகத் தடம் பதிக்கத் தொடங்கினர்.

## மேஜர் தாகூர் (ரவீந்திரன்)

அமைதி தவழும் பார்வை, அமைதியான போக்கு, தன் கோபத்துடன் தனக்குள்ளேயே சமரசம் செய்யும் பாங்கு போன்ற மேலெழுந்தவாரியான பார்வைக்குள் அடக்கிவிடக்கூடியவன் அல்லன் அவன்.



மேஜர் தாகூர்
(அழகரத்தினம் ரவீந்திரன்)
புலோலி, யாழ்ப்பாணம்.

ஐந்தாவது பயிற்சி முகாமில் எல்லாவற்றையுமே படையியற் பார்வையில் சிந்திக்கும் அவனது பாங்கு பயிற்சியில் நின்ற போராளிகளுக்குள் அவனைமட்டும் தனியாக முத்திரை குத்தியது. இளம் வயதுக்குரியவற்றில் பம்பல் (பகிடி) மட்டுமே அவனிடம் எஞ்சியிருந்தது. எங்கேயாவது சிரிப்பொலி கேட்டால் அந்த இடத்தில் அவனைக் காணலாம். "லக்ஸ்பிறே" பால்மா போட்ட உப்பில்லாத பருப்புக் கறியைக்கூட நாக்குகள் சுவையறியாமல் சாப்பிட்டுவிடும் அளவுக்கு அவனது நகைச்சுவையில் சுவை இருக்கும். களைப்பு, சோர்வு, உளைச்சல், கோபம் எல்லாவற்றுக்குமே அவனது நகைச்சுவை மருந்தாகிவிடும்.

அவனிடமிருந்த தேடல், நுண்ணறிவு, ஆங்கிலமொழி அறிவு என்பவற்றினை தொலைத்தொடர்புசாதனக் கற்றலிலும் திறமையாகப் பயன்படுத்தி முன்னணியில் தேறியவன். பயிற்சிகள் முடித்து தமிழீழம் வந்ததும் திருமலை மாவட்டத்துக்கான தொலைத் தொடர்பாளனாக (Communication set) புலேந்தி அம்மானால் நியமிக்கப்பட்டான். காட்டு வாழ்க்கைக்குள் தன்னை ஈடுபடுத்தத் தொடங்கினான். "கெரில்லா வீரனுக்கு காடு என்பது கரும்பு." அவனுக்கும் காட்டு வாழ்வில் ஒரு காதல்.

அவனது காட்டுத்தளம், எவ்வடிவில் அமைக்கவேண்டும், பாதுகாப்பு வேலிகள் எங்கெங்கு போடவேண்டும். தனது தொலைத்தொடர்பிற்கான கொட்டகை எங்கு அமையவேண்டும். என்பவற்றையெல்லாம் அவனது படையியற் கண்ணோட்டத்தில் அவனே தீர்மானிப்பான்.

அவனது பன்குள முகாமில் தொலைத்தொடர்பு கொட்டகை, வீட்டில் உள்ள எல்லா அறைகளையும்விட சுத்தமாகவிருக்கும். அந்தந்தப் பொருட்கள் அந்தந்த இடத்திலிருக்கும். அவன் நேசித்த தலைவரின் படம் அவன் விழிக்குமிடத்தில் தொங்கும். - அதி விரைவாக எடுத்துப் பாவிக்கத்தக்க வகையில் அவனது துப்பாக்கியும் சுவரில் தொங்கும். அவனது தனிநபர் சுத்தம், தங்குமிடச்சுத்தம், துப்பாக்கியின் சுத்தம் என்பன போர்வாழ்வில் எல்லாப் போராளிகளுக்கும் முன்னுதாரணமானவை.

அவனது 'கிற்பாக்'கை (hit bag) மட்டும் சொல்லாமல் இருக்கமுடியாது. சக போராளிகள் இலைகுழைகளை முறித்துப் போட்டுப்படுப்பார்கள். சில வேளை தண்ணீரையும் படுக்கையாக்கிப் படுப்பார்கள். அவனுக்கு மட்டும் எப்பொழுதும் படுக்கை விரிப்பு வேண்டும்; அது அந்தப் பையினுள் எப்போதுமிருக்கும். எல்லோருமே எடுத்துவந்த உணவு அப்பப்ப தங்களை அறியாமலேயே வாய்க்குள் போனதால் முடிந்திருக்கும். பின்பு ஒவ்வொருத்தருமே ஆளையாள் வாடிய முகத்துடன் பார்த்திருக்க; அவனின் முகமும் வாடியிருக்கும். திடீரென்று தோன்றும் இந்தியப்படையின் சுற்றிவளைப்பில் எல்லோருமே சண்டையிட்டு களைத்து பின் ஒன்று சேரும் போது தாகூரின் 'கிற்பாக்'கினுள் உணவிருக்கும் என்ற நம்பிக்கையில் எல்லோரும் அவனையே பார்ப்பார்கள். அவர்களது நம்பிக்கை வீண்போவதில்லை. காயப்பட்ட போராளிகளுக்கு வைத்தியன் ஆவான், காய்ச்சல்காரனுக்கு 'குளிசை' எடுத்துக் கொடுப்பான். ஓய்வு நேரங்களில் 'கிற்பாக்'கினுள் மறைந்திருக்கும் புத்தகங்கள் தீனியாகும்; ஆங்கில அகராதி மொழிமாற்றிக் கொடுக்கும். இத்தனையும் அவனது 'கிற்பாக்' வைத்திருக்கும். ஒன்றுக்கு இரண்டு தண்ணீர்க் கான்களை வைத்திருக்கும் அவன்தான் பலரின் தாகத்தையும் தீர்ப்பான். அவனது நண்பன் குணம் கூறுவதுபோல்
"ஒரு கெரில்லா வீரனுக்கு அவன் செய்முறை வழிகாட்டிப் பயிற்சிப் புத்தகம்."

'பிளேன்ரி' (வெறும் தேநீர்) என்றால் அவனுக்கு அலாதிப்பிரியம். அதற்காக மாட்டிக்கொண்ட வரலாற்றையும் சொல்லத்தான்வேண்டும்.

1988ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஆலங்கேணி மேற்கு கங்கைக் கரையோரம் (திருமலை) வேவுக்காக சென்றவர்களுக்கு 'பிளேன்ரி' விடாய்த்துவிட காட்டின் மறைவிடத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்துவிட்டு, தேயிலை, சீனிக்காக மூவரை மறைவிடக் களஞ்சியம் ஒன்றிற்கு அனுப்பிவிட்டு காத்திருக்க, போனவர்கள் நெடுநேரமாகியும் திரும்பாமையால் வரும் வழியைப் பார்த்தவாறே மரக்கிளையில் ஏறியிருந்தவனுக்கு தூரத்தே ஆட்களின் அசைவு தெரிய "மச்சான் போனவங்கள் வாறான்கள்...... இடம் தெரியாமல் இடறுப்படுகினம்" என சக போராளிகளிடம் கூறிவிட்டு ஒலி எழுப்ப, அங்கிருந்து வந்தது பதில் குரலல்ல. இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சன்னங்கள். பிறகென்ன நீங்கள் நினைப்பது போலத்தான்; சேறும் சகதியும் கற்களும் முட்களும் அவர்களுக்கு 'பிளேன்ரி' காட்டின.

ஒருநாள் திடீரென அவனது தோளில் ஒரு 'கிளி' காணப்பட்டது. "மச்சான் நாய், பூனை எண்டாலே கிட்டவும் அடுக்காதவன் கிளியைப் பிடிச்சந்து வைச்சிருக்கிறான்ரா" நண்பர்களின் கேலிப்பேச்சுக்கு மத்தியிலும் அந்தக் கிளியை செல்லமாக வளர்த்தான். தன்னைப்போல் சுத்தமாக இருக்கச் சொல்லி அதன் தலையில் செல்லமாகக் குட்டுவான். "கெரில்லா வீரனைப்போல நீயும் இருக்கவேணும்" என தான் சாப்பிடுவதை, குடிப்பதை எல்லாம் அதற்கும் ஊட்டுவான். அவனது 'பிளேன்ரி' என்றால் கிளிக்கும் கொள்ளைப்பிரியம். கடைசியில் 'பிளேன்ரி'க்கென வைத்த வெந்நீரை கிளி குடிக்கப்போய் பானைக்குள் விழுந்து இறந்துகிடந்தது; 'பிளேன்ரி'யை அவனுக்கு வெறுப்பாக்கியிருக்கும்.

தொலைத்தொடர்பு சாதனத்துடன் அவன் அதிககாலம் பணியாற்றியமையால் எதிரியுடன் சண்டைக்கான வாய்ப்பு அவனுக்குக் குறைவாகவே அமைந்தது. படையியற் சிந்தனை நிரம்பிய அவனுக்கு தான் செய்து கொண்டிருக்கும் பணி பொருத்தமானதா? என்ற கேள்வி அடிக்கடி அவனுக்குள்ளிருந்து எழுந்து கொண்டேயிருந்தது உண்மைதான். அதைவிட படைத்துறையில் இருந்து கொண்டு சண்டைக்குப் போகாத போராளிக்கு சகபோராளியின் 'கடி' எப்படி இருக்கும் என்பதனையும் அவன் நன்கறிந்தவன். இடைவிடாத அவனது நச்சரிப்பால் வேறு ஒருவனுக்கு தொலைத்தொடர்புப் பணியை பழக்கிவிட்டு அவன் வேவுக்கும், சண்டைக்களத்திற்கும் செல்லத் தொடங்கினான்.

வேவுக்குச் செல்லும் வழியில் எதிரியின் தடயங்கள் ஏதாவது தென்படும். எதிரியின் 'சூ' அடையாளம், சாப்பாட்டுச்சரை, பீடித்துண்டு, நெருப்புக்குச்சு, மணம், குரங்குகளின் அலறல் இப்படியாக எத்தனையோ. அவன் சிறு விடயத்தையும் புறக்கணியாது மிகவும் விழிப்புடன் செயலாற்றுவான். 'சூ'வின் அடையாளப்பட்ட மண்ணை எடுத்து படையினன் எத்தனை நாட்களின் முன், மணியின் முன் அப்பாதையால் கடந்திருக்கிறான் என்பதை துல்லியமாக மதிப்பிடுவான். பின்வாங்கல் என்பது கூர்மையான ஆய்வின் பின்னே நடக்கும். சிக்கல் ஏதுமில்லையெனில் வேவுக்கான பயணம் தொடரும்.

04.03.1989 'கடவாணை'யில் (திருமலை) சிங்கள கடற்படைக்கெதிரான தாக்குதல் (ஐந்து படையினர் கொல்லப்பட அவர்களிடமிருந்து M16, மினிமினி L.M.G உட்பட பல ஆயுத தளபாடங்கள் கைப்பற்றிய தாக்குதல்.)

01.08.1989 ஆலங்கேணியில் (திருமலை) இந்திய ரோந்து அணிக்கெதிரான தாக்குதல் என அவன் முத்திரை பதித்த தாக்குதல் நடவடிக்கைகள் பல.

சண்டையில் எதிரியின் முகத்தைக் கூட சிதைத்துவிடும் அவனது ஆவேசம், சண்டைமுடிந்து திரும்பி வரும் வழியில் திரும்பி ஓடிச்சென்று எதிரியின் உடல்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



www.eelamview.com